Regd. No. M. 4593. "KUDI ARASU" 12 பக்கங்கள்

# குடி அரசு

Estd. 1924. தனிப்பிரதி விலை ரு. 0-1-6
வருட சந்தா ரூ. 5. சனி வெளியீடு.

வாலை 17 } ஈரோடு, 9-9-1944 ஆவணி-மீ 25உ { மலர் 48

# பெரியார் ஈ. வெ. ரா. வேண்டுகோள்

திராவிடர் கழக தோழர்களே வாலிபர்களே, சேலம் மாகாட்டில் நீங்கள் பதினாயிரக் கணக்காகக்கூடி மிக்க எழுச்சியோடு பல முக்கியமான தீர்மானங்களை ஏகமனதாக நிறைவேற்றி வைத்தீர்கள். உங்கள் வேலை அவ்வளவு தானா?

அவைகளை செய்கையில் அமுலுக்கு கொண்டுவர வேண்டாமா?

அதற்கு யார் பொறுப்பாளி?

நானேதானா?

நான் ஒருவனே போதுமா?

நீங்கள் மாகாட்டிலிருந்து வீட்டுக்குப் போனவுடன் உங்கள் சொந்த காரியங்களைப் பார்த்துக்கொண்டு வேடிக்கையாக வாழ்வு நடத்திவிட்டு 6-மாதம் பொறுத்துக் கூட்டப்படுகிற கூட்டத்திற்கு வந்து என்னைப்பார்த்து "நீ என்ன வேலை செய்தாய்? அமைப்பு இல்லை, மெம்பர் இல்லை, என்னை யோசிக்கவில்லை, கட்சியின் பெருமை போய்விட்டது, சர்வாதிகாரம் செய்கிறாய், மற்ற மக்களை நீ அனுசரிப்பதில்லை" என்று நீங்கள் சொல்லிவிட்டால் போதுமா?

அந்தந்த ஜில்லாக்களில் இருக்கிற பார்ப்பனர்கள் (காங்கரஸ்காரர்கள்) என்ன செய்கிறார்கள் என்றும், முஸ்லீம்கள் (முஸ்லீம் லீக்காரர்கள்) என்ன செய்கிறார்கள் என்றும் அவர்களின் பிரமுகர்கள் என்ன செய்கிறார்கள் என்றும் பாருங்கள். அவர்களை இந்தக்காரியங்களில் பின்பற்றுங்கள். வெறும் தலைவரை குறைகூறுவதும் அதிகாரம் செய்வதும் மாத்திரமே ஒரு கட்சி மக்களின்—பின்பற்றுவோரின்—பாடுபடுவோரின் வேலையாக இருந்தால் அக்கட்சியால் பயன் ஏற்படுவது மிக்க அதிசயம்தான்.

ஆகவே தோழர்களே, வாலிபர்களே, யாராவது கூட்டம்கூட்டி வைத்தால், கூட்டின இடத்துக்கு வந்து மேடையில் குற்றப்பத்திரிகை படித்துவிட்டுப் போவது மாத்திரம் கடமை என்று சிலர் கருதுவது போல் கருதிவிடாமல் உங்களுக்கும் பொறுப்பு இருக்கிறது என்று உணருங்கள். அதுதான் நீங்கள் கட்சிக்கு அங்கத்தினர்களை சேர்க்க வேண்டியது, ஆங்காங்கு அமைப்புகளை ஏற்படுத்தவேண்டியது. இவை உங்கள் முயற்சியும் ஒத்துழைப்பும் இல்லாமல் முடியா. இது வரையிலும் நடந்து போனது போகட்டும். குறைசொல்லிக்கொண்டு திரிகிறவர்கள் திரியட்டும். எதிரி பத்திரிகைகளை தஞ்சமடைந்து விஷமத்தனமான அறிக்கை விட்டுக்கொண்டு திரிகிறவர்கள் திரியட்டும்.

பொறுப்பும் தன்னலமற்ற பெருங்குணமும் திராவிடர்கள் மானத்தில், மேன்மையில், விடுதலையில் கவலையும் உள்ள நீங்கள், அருள் கூர்ந்து மண்டல அமைப்புத்தலைவர்களுடன் ஒத்துழைத்து, மாகாட்டுக் கட்டளையை நிறைவேற்ற உதவி செய்யுங்கள் என்று வேண்டிக் கொள்ளுகிறேன்.

ஈ. வெ. ராமசாமி,

தலைவர், (ஜஸ்டிஸ் கட்சி) திராவிடர் கழகம்.

## பெரியார் ஈ. வெ. ரா.

ஈரோடு: பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்கள் 6-9-44-ஆம் தேதி இரவு புறப்பட்டு சென்னை சென்றார். அங்கிருந்து 9-ஆம் தேதி புறப்பட்டு நாகை செல்வார். நாகையில் 10-9-44-ஆம் தேதி நடைபெறும் பொதுக் கூட்டத்தில் கலந்துகொள்வார். அன்று இரவு நடைபெறும் 'போர் வாள்' நாடகத்தில் தலைமை வகிப்பார்.

11-ஆம் தேதி வாக்கில் ஈரோடு திரும்புவார். பின்னர் இரண்டு வாரத்திற்காவது வேறு எங்காவது சென்று ஓய்வு எடுத்துக் கொள்வார்.

## திருச்சேறையில் வாரியார் விழிப்பு.

திருச்சேறை (கும்பகோணம்) 1-9-44 திருச்சேறை சாரநாதப் பெருமாள் கோவிலில் கிருபானந்த வாரியாரின் காலட்சேபம் நடந்தபொழுது திராவிட இளைஞர்களால் பல கேள்விகள் எழுதப்பட்ட இரண்டு கேள்வித்தாள்களைக் கொடுக்கத் தீர்மானித்தார்கள். அதைக்கண்டு வெகுண்ட, டிரஸ்டி, காலட்சேபம் முடிந்தவுடன் கேள்விகட்கு பதில் சொல்லுவதாக ஒப்புக்கொண்டார். இருப்பினும் ஆங்காங்கு கலவரம் விளைந்துகொண்டே இருந்தது. கடைசியாக, கிருபானந்த வாரியாரை மேடையிலிருந்து இறக்கி கீழே உட்காரச்செய்து திராவிட தோழர்களால் சூழப்பட்டு, கேள்விகள் கேட்கப்பட்டார்.

வாரியார் விழிப்பதைக்கண்ட, டிரஸ்டி தானே பதில் சொல்லுவதாகச் சொல்லி கேள்விகளுக்கு தாறுமாறாகப் பதில்கூற ஆரம்பித்தார். உடனே திராவிடத் தோழர்களால் ஆட்சேபிக்கப்பட்டது. கூட்டத்தில் கலவரம் விளைய ஆரம்பித்தது. 'கேள்விக்கும் பதில் இல்லை' என்ற கூக்குரலுடன் கூட்டம் [illegible] தில் முடிந்தது.

# சேலம் மாநாட்டு முடிவுகள்

## நாடெங்கும் ஆதரவு

### திருத்துறைப்பூண்டி

31-8-44ல் திருத்துறைப்பூண்டி திராவிட இளைஞர் கழகத்தின் சார்பில், சேலம் மாநாட்டை அனுசரித்து ஓர் கூட்டம் கழகத்தின் அங்கத்தினர்களால் கூட்டப்பட்டது. அதுசமயம் தோழர் வி. ராஜமாணிக்கம் தலைமை வகிக்க தோழர்கள் எஸ். மகடல், என். எஸ். தெக்ஷணாமூர்த்தி முதலியோர், சேலத்தில் நடைபெற்ற தீர்மானங்களை ஆதரித்தும், பெரியார் வழியைப்பின்பற்ற வேண்டும் என்றும் விளக்கமாகப் பேசினார்கள். திராவிடநாடு திராவிடருக்கே ஆகவேண்டுமென்றும், பெரியார்தான் நிச்சயமான திராவிடத் தலைவர் என்பதாகவும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### திருச்செங்கோடு

2-9-44ல் நடைபெற்ற திருச்செங்கோடு உண்மைநாடுவோர் சங்கப் பொதுக்கூட்டத்தில், 27-8-44ல் சேலத்தில் முறைப்படி நடைபெற்ற 16வது தென்னிந்திய நல உரிமைச்சங்க மாகாண மாநாட்டைப்பற்றியும் அதன் தலைவரைப்பற்றியும் அதில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களைப் பற்றியும் அதில் கலந்துகொண்ட பல்லாயிரக்கணக்கான பிரதிநிதிகளைப்பற்றியும் சில சுயநலவாதிகளும் சூழ்ச்சிக்காரர்களும், சில பத்திரிகைகளில் தப்பும் தவறுமாக அறிக்கைவிட்டிருப்பதைக்கண்டு அவர்களை இக்கூட்டம் பலமாகக் கண்டிப்பதோடு அவர்கள் மீது தலைவர் பெரியார் அவர்கள் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று இக்கூட்டம் கேட்டுக்கொள்கிறதென்றும் தீர்மானம் நிறைவேறியது.

### சேலம் செவ்வாய்ப்பேட்டை

சுயமரியாதைச் சங்கத்தில் 30-8-44ல் நடைபெற்ற செவ்வாய்ப்பேட்டை திராவிடர் கழகத்தின் கமிட்டிக் கூட்டத்தில் சென்னை மாகாண 16-வது ஜஸ்டிஸ் மாநாட்டில் 20,000 பேர்கள் சேர்ந்து ஏகமனதாக செய்த தீர்மானங்களை சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்று அறிக்கைவிட்டிருக்கும் தோழர்களான சேர்மன் தோழர் பி. ரத்தினசாமி, சி. ஜி. நெட்டோ, ஏ. கணேசசங்கரன், பி. பாலசுப்ரமணியம் மற்றும் பலரின் பொறுப்பற்ற தன்மையைக் கண்டு வருத்தத்தோடு அவர்களை இக்கூட்டம் வன்மையாகக் கண்டிக்கிறது என்றும் சேலம் மாவட்ட திராவிடர் கழகத் தலைவராக உள்ள தோழர் ஏ. கணேசசங்கரன் அவர்களும் மற்றும் உள்ள கமிட்டி அங்கத்தினர்களில் சிலரும் ஜஸ்டிஸ் கட்சிக்கு "திராவிடர் கழகம்" என்று பெயரிடவேண்டுமென்று வந்த தீர்மானத்தை எதிர்த்ததோடு பொறுப்பற்ற தன்மையில் அறிக்கையும் விட்டிருப்பதால் மேற்படியார்களை சேலம் மாவட்ட திராவிடர் கழகத்திலிருந்து நீக்கிவிடவேண்டுமாய் மேற்படி கழகத்தாரைக் கேட்டுக் கொள்வதாகவும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### கோவை

3-9-44-ல் தோழர் சி. ஆர். நாராயணசாமி நாயுடு தலைமையில் நடைபெற்ற கோவை (தெ. இ. ந. உ. சங்க) திராவிடர் கழகக் கூட்டத்தில் தோழர்கள் எம். பட்டிலிங்கம், எஸ். ஜி. பரதம், சி. ராஜகோபால் முதலியவர்கள் சேலம் மாநாட்டின் நாமும் என்பது பற்றிப் பேசிய பின், சேலத்தில் நடைபெற்ற 16-வது தெ. இ. ந. உ. சங்க மாநாடு பெருவாரியான மக்களின் ஆதரவைப் பெற்று நடந்த மாநாடு ஆதலால், ஓர் சிலர் விடும் அறிக்கை சரியான பிரதிநிதித்துவம் வாய்ந்ததல்ல வென்றும், அறிக்கைகள் வெளியிட்டவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமாய் தலைவரை கேட்டுக் கொள்வதாகவும், திராவிடர் கழகத்தின் புதிய மாகாண கமிட்டி மெம்பர்களைத் தெரிந்தெடுக்கவேண்டிய ஏற்பாடுகளை உடன்செய்ய தலைவரைக் கேட்டுக் கொள்வதாகவும் தீர்மானிக்கப்பட்டது.

## சீர்திருத்தத் திருமணம்

தன்மான இயக்கத் தோழரும், சென்னைத் திராவிடர் கழக உறுப்பினருமான தோழர் சீபதிக்கும், சென்னையில் பிரபல புத்தகக் கம்பெனி சொந்தக்காரரான, எம். தாமோதரம் அவர்களின் இளைய மகள் தோழர் ராஜீவலோசனிக்கும், 3-9-44 காலை 6 மணிக்கு, தியாகராயநகர் அஜீஸ் ரோடிலுள்ள மாளிகையில் தோழர் கா. மு. இராஜரத்தினம் அவர்கள் தலைமையில் சீர்திருத்தத் திருமணம் சிறப்பாக நடைபெற்றது. ஆசிரியர் சிவிலை சிவமுத்து, தோழர் என். வி. நடராசன் ஆகியவர்கள் சொற்பொழிவாற்றினர். பல நண்பர்களால் வாழ்த்துப் பத்திரங்கள் வாசித்தளிக்கப்பட்டன. ஏராளமான நண்பர்களும், சென்னையிலுள்ள திராவிட இயக்கப் பிரமுகர்களும் வந்திருந்தனர்.

### நெல்லை

## தாழ்த்தப்பட்டோர் மாநாடு

கோவில்பட்டி: வை மாசம் 1-10-44 ஆம் தேதி கோவில்பட்டி ஆ. தி. ச சி. சங்கத்தின் முயற்சியால் அமைக்கப்படும் எம். சி. ராஜா பந்தலில் சென்னை தோழர் எஸ். சண்முகம்பிள்ளை அவர்கள் தலைமையில் நடைபெறும். பல தோழர்கள் சொற்பொழிவாற்றுவார்கள். அன்று இரவு தூத்துக்குடி ஜே. எல். பி. ரோச்விக்டோரியா தலைமையில் யுத்த ஆதரவு மாநாடும் நடைபெறும்.

## இன்றுமா யாகம்?

சித்தக்காடு தோழர் கெ. ராமையா எழுதுவதாவது:—

மாயவரம் தாலூக்கா ராமாபுரம் என்ற கிராமத்தில் சென்ற 30-8-44 ஆம் தேதி பார்ப்பனர்கள் கூடி ஒரு யாகம் நடத்தினார்கள். ஓம குண்டத்தில் பலியிடப்பட்ட ஆட்டைப் பொசுக்கி அங்கு கூடிய பார்ப்பனர்கள் தின்று மகிழ்ந்தார்கள். இதில் படித்துப் பட்டம்பெற்று உத்தியோகம் வகித்து வரும் பார்ப்பனர் அதிகாரிகளும் கலந்துகொண்டது குறிப்பிடத்தக்கதாகும்.

இந்த யாகத்தை நடத்தினவர்கள் பி. ஏ. படித்த சாஸ்திரிகள் உட்பட பல பார்ப்பனர்கள் என்று தெரிகிறது. யாகத்தில் வெந்த ஆட்டிறைச்சி அவ்வளவு ருசி போலும் இவர்களுக்கு. இவ்வளவு நாகரீகம் வாய்ந்த இந்த நாளில் யாகத்தின் பெயரால் ஆட்டை சித்திரவதை செய்வது கொடுமையிலும் கொடுமையாகும்.

## இராசிபுரம் திராவிடர் கழகம்

இராசிபுரம்: 30-8-44-ல் தோழர் பி. ஏ. சித்தப்பா அவர்கள் தலைமையில் கூடிய மேற்படி கழகக் கூட்டத்தில், 27-8-44-ல் சேலத்தில் கூடிய தெ. இ. ந. உ. சங்க மாநாட்டில் எல்லா தெ. இ. ந. உ. சங்கப் பெயர்களையும் "திராவிடர் கழகம்" என பெயரிடவேண்டுமென தீர்மானிக்கப்பட்டபடி, 'இராசிபுரம் திராவிடர் கழகம்' என மாற்றியமைக்க ஒப்புக்கொள்ளப்பட்டதென்றும், இராசிபுரத்தில் தற்போதிருந்து வரும் நம் இயக்க சங்கங்கள் அனைத்தையும் ஒன்றாக இணைத்து இராசிபுரம் திராவிடர் கழகம் என்ற ஒரே சங்கத்தின் பெயரால் இயங்கவேண்டும் என்பதாகவும், இராசிபுரம் திராவிடர் கழகத்திற்கு தோழர்கள் பி. ஏ. சித்தப்பா தலைவராகவும், கே. தெய்வசிகாமணி, எஸ். கிருஷ்ணசாமி ஆகியவர்கள் செயலாளர்களாகவும், சி. சுப்பிரமணியம் பொருளாளராகவும், ஏழுபேர்கள் அங்கத்தினராகவும் தெரிந்தெடுப்பதாகவும் தீர்மானிக்கப்பட்டது.

## விருதுநகரில் திருவள்ளுவர் சங்கச் சிறப்புக் கூட்டம்

விருதுநகர் திருவள்ளுவர் சங்கத்தின் சிறப்புக் கூட்டம் ஒன்று 26-8-44 மாலை 8-30 மணிக்கு நகர் க்ஷத்திரிய வித்தியாசாலைக் கட்டிடத்தில் தோழர் சுந்தரபாண்டிய நாடார் தலைமையில் நடைபெற்றது. வித்துவான் சிவக்கொழுந்து பிள்ளை "மனித வாழ்க்கையும், திருக்குறளும்" என்ற பொருளின் பேரில் சொற்பொழிவாற்றினார். செயலாளர் சா. வேதமுத்து வந்தனோபசாரம் கூறினார்.

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

# ஈரோட்டில் கிந்தனார்

## பெரியார் தலைமை

கோவை ஜில்லா திராவிடர் கழகத்துக்கு ஈரோட்டில் ஒரு கட்டடம் ஏற்படுத்துவதற்கு நிதி திரட்ட நகைச்சுவை அரசு என். எஸ். கிருஷ்ணன் அவர்களது கிந்தனார் காலக்ஷேபக் கச்சேரி ஒன்று ஈரோட்டில் 3-9-44 தேதி பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் தலைமையில் நடத்தப்பட்டது. நன்கொடையும் டிக்கட் வசூலுமாக சுமார் ரூ. 2500 வசூல் ஆயிற்று. இதில் செலவு ரூ. 1000 போக 1500 ரூ. போல் மீதம் ஏற்பட்டது. இதை நடத்த பெருமுயற்சி எடுத்துக்கொண்டவர்கள் தோழர்கள் என். அர்ச்சுனன், எஸ். ஆர். சந்தானம், பெத்தாம்பாளையம் பழனிச்சாமி ஆகியவர்கள் ஆகும்.

காலக்ஷேப முடிவில் தலைமை வகித்த பெரியார் பேசியதாவது:—

### பெரியார் பேச்சு

தாய்மார்களே, தோழர்களே, நகைச்சுவை அரசு கிருஷ்ணன் அவர்களே! இன்று நடந்த இந்த கிந்தனார் சரித்திரக் கதையைக் கண்டு களித்தீர்கள். உங்களது மகிழ்ச்சியை சிரிப்பை அடிக்கடி காட்டினீர்கள். நமது நகைச்சுவை அரசு கிருஷ்ணன் அவர்கள் ஒருமேதாவி, அதோடு அவர் ஒரு வள்ளல் என்றும் சொல்லவேண்டும். அவர் தன்னால் கூடிய அளவுக்குமேல் பொதுநலத்துக்கு உதவி வருகிறார். இம்மாதிரியான பொதுநலத்துக்கு நடத்தும் கச்சேரிகளுக்கு அவர் வழக்கமாக வாங்கும் அளவைவிட மிகக் குறைந்த அளவுக்குச் சென்று கதை நடத்திக் கொடுக்கிறார். அவர் சமீபத்தில் சென்னையில் நடந்த சந்திரோதய நாடகத்தில் பேசும் போது "நான் ஏராளமாக பணம் சம்பாதித்தேன். ஆனால் அதில் பெரும் பாகம் பொதுநலத்துக்கு உதவிவிட்டேன்" அதாவது பல லக்ஷ ரூபாய் சம்பாதித்தேன். இப்போது அரை லக்ஷ ரூபாய் சுமார் தான் என்னிடம் இருக்கிறது. மற்றவை பொதுநலத்துக்கு உதவி வந்தேன் என்று சொன்னார். அந்த முறையிலேயே நமது கழகத்துக்கும் உதவி இருக்கிறார்.

இவர் தனது தொழிலில் ஒரு மேதாவி என்றாலும் அதை நடத்தும் முறையில் ஒரு பெரிய புரட்சியாளர் என்றே சொல்லவேண்டும். அதுவும் லெனின் செய்தது போன்ற புரட்சி என்றே சொல்லவேண்டும். ஏனெனில் நாடகத் துறையிலும் கதைத் துறையிலும் இசைத் துறையிலும் ஒரு பெரிய புரட்சி ஏற்படுத்தி இருக்கிறார்.

அதாவது இந்த முத்துறையிலும் இதுவரை ஈடுபட்டிருந்த புலவர்கள், நிபுணர்கள் பெரும்பாலோர் [illegible] மக்களுக்கு முட்டாள் தனமும் மூடநம்பிக்கையும் ஏற்படுவதற்கு அனுகூலமாக நடத்தி வயிறுவளர்த்தும் பணம் திரட்டியும் பெருமை பெற்றும்; நாட்டுக்கும் திராவிட மக்களுக்கும் கேடு உண்டாக்கும் துரோகிகளாக நடந்து வருகிறார்கள். மக்களுக்குள் அறிவுக்கு ஆக்கம் சுயமரியாதை உணர்ச்சி இல்லாததால் இப்படிப்பட்டவர்களின் ஈன வாழ்வு இன்னமும் நம் நாட்டில் நடந்து வருகிறது. சமீபத்தில் சென்னையில் நடந்த சந்திரோதயத்தில் தலைமை வகித்த போது இதுவிஷயத்தில் எனக்குள்ள மனவேதனையைகாட்டிக்கொண்டேன். அதை சிலர் நான் பல புலவர்கள் மீது கோபப்பட்டுக் குறைகூறினதாகப் பொருள் கொண்டார்கள். அப்படி அவர்கள் கருதியதற்கு வருந்துகிறேன். கோபமென்று கருதினாலும் சரி என்றே வைத்துக்கொள்வோம். அக் கோபம் சரியானதா? தப்பானதா? சரியென்றுபட்டால் இவர்கள் அதைதணிக்கவேண்டாமா? தப்பு என்று பட்டால் மூக்கையும் அந்த வழியில் செல்லுவது தர்மமா?

ஆனால் நம் அருமைக் கிருஷ்ணன் அவர்கள் அக்கோபத்துக்கோ வேதனைக்கோ இடம் கொடாமல் தனது தொழிலை வெகு தூரத்திற்கு மாற்றி புரட்சிசெய்து மற்ற மக்களுக்கு வழிகாட்டியாகவும் ஆகிவிட்டார். முக்கலைதிருத்தச் சரித்திரத்தில் கிருஷ்ணன் பெயர் பொன்னினால் பொறிக்கப்படும். நந்தன் கதையும், சீர்தன் கதையும் நடந்திராத பொய்க்கதை என்பதில் உங்களில் பகுத்தறிவாளிகளுக்கு சிறிதும் சந்தேகமே இருக்காது. ஆனால் நந்தன் கதை, நாடகம், சினிமா நடத்துகிறவர்கள் பொய்க்கதை நடத்துவதோடு மக்களுக்கு முட்டாள்தனமும், மானமற்றதனமும், மூடநம்பிக்கையும் ஏற்படும்படியாக நடத்தி தங்கள் சுயநல வயிறு வளர்க்கிறார்கள். நம் கிருஷ்ணன் அவர்கள் கிந்தன் கதை நடத்துவதில் கதை பொய்யானாலும் அதை மக்களுக்கு மானமும், அறிவும், முற்போக்குணர்ச்சியும் ஏற்படும்படி செய்து அதன் வருவாயில் பெரும்பாகம் பொதுநலத்துக்கு உதவுகிறார்.

ஆகவே புலவர்களால், அறிஞர்களால், மேதாவிகளால் நாட்டுக்கு கேடு பயப்பதற்கு நந்தன் கதைக்காரர்கள் பயன்படுவதும், நாட்டுக்கு மேன்மையும், அறிவும், மானமும் உண்டாவதற்கு கிந்தன் கதைக்காரர் பயன்படுவதும் பார்த்தே நாடு கேடடைவதற்கு புராணங்களும், புலவர்களும் காரணம் என்பதையும், நாடு முன்னேற்றமடைவதற்கு கிருஷ்ணன் போன்ற அறிஞர்களும், பகுத்தறிவு புலவர்களும் காரணம் என்பதையும் நீங்கள் அறிந்து கொள்ளலாம். இவ்வளவு பெரிய புரட்சிகரமான காரியம் செய்வதும், அதில் வெற்றி பெறுவதும் நம் கிருஷ்ணனுக்கு அபார சக்தி ஒன்றும் இல்லை. ஆனால் அவரிடம் ஏதாவது அபார சக்தி இருக்கிறதென்றால் அவருக்கு தன்னலம் இல்லை; பண ஆசைப் பிசாசுக்கு அவர் மனம் அடிமைப்படவில்லை. மற்றவர்கள் என்ன சொல்லுவார்கள் என்ற கவலை அவருக்கு இல்லை. இது போலவே எவனொருவன் தன்னலமில்லாமல், பயமில்லாமல் தொண்டாற்ற முயலுகிறானோ அவன் வெற்றிபெறுவான் என்பதோடு ஒரு புரட்சிவீரனுமாவான் என்பதற்கு நமது கிருஷ்ணன் அவர்களே எடுத்துக்காட்டாகும். அவருக்கு திராவிட கழகத்தின் சார்பாக எனது மனமார்ந்த நன்றியும் திராவிட மக்கள் சார்பாக எனது பாராட்டுதலும் வணக்கமும் உரியதாகுக.

இன்று இங்கு நடத்திய இந்த காலக்ஷேபத்தை பாராட்டுவதன் அறிகுறியாக கிருஷ்ணனுக்கு பூமாலை சூட்டுவதற்கு பதிலாக இந்தப் பொன்மாலையைச் சூட்டி இந்தப் பொன் பதக்கத்தையும் திராவிடர் கழக சார்பாக அவருக்கு அணிகிறேன் என்று பேசி நகைச்சுவை கிருஷ்ணன் கழுத்துக்கு பொற்சங்கிலி போட்டு பதக்கத்தை அணிந்தார். தவிர பெரியார் அவர்கள் தனியாக பொன் பதக்கம் ஒன்றும் வழங்கினார்.

### கிருஷ்ணன் பேச்சு

பெரியோர்களே, பெரியார் என்னை மிகப் புகழ்ந்தார் அவர் நம் எல்லோருக்கும் தந்தை ஆவார். தந்தை மக்களை புகழ்வது இயற்கையேயாகும். ஏதோ என் சக்திக்கு ஏற்ற தொண்டு செய்து வருகிறேன். இந்தக் கழகம் நன்றாய் நடைபெறவேண்டும் என்று ஆசைப்பட்டு இதில் வரும் பணம் இக்கழகத்திற்கு நல்ல முறையில் பயன்படும் என்று நம்பி எனது பங்கை இக் கழகத்திற்குச் செலுத்துகிறேன் என்று கூறினார்.

பெரியாருக்கும் நகைச்சுவை அரசருக்கும் திராவிடர் கழகத்தாரால் வரவேற்புப்பத்திரங்கள் வாசித்தளிக்கப்பட்டன. தோழர் பெத்தாம்பாளையம் பழனிச்சாமி, பெரியார் அவர்களுக்கும், தோழர் என். அர்ச்சுனன் அவர்கள், நகைச்சுவை அரசு கிருஷ்ணன் அவர்களுக்கும் வாசித்தளித்தனர். இறுதியாக யாவருக்கும் தோழர் என். அர்ச்சுனன் அவர்களால் வந்தனம் கூறப்பட்டது. மாலை முதல் இரவு முழுதும் மழையாயிருந்தும் ஏராளமான மக்கள் வந்து கூடியிருந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

### நன்றி

ஈரோட்டில் 3-9-44-ல் தேதி கோவை மாவட்ட திராவிடர் கழக நிதிக்காக நடைபெற்ற கிந்தனார் காலட்சேபம் வெற்றிகரமாக நடைபெற எங்களுடன் [illegible]

# தோழர் டி. எம். தெய்வசிகாமணி ஆச்சாரியார்—பெரியார் கடிதப் போக்கு வரத்து

தென்னிந்திய விஸ்வகர்ம மகாஜன மத்திய போர்டு தலைவர் தோழர் டி. எம். தெய்வசிகாமணி ஆச்சாரியார் அவர்களுக்கும் பெரியார் ஈ. வெ. ராமசாமிக்கும் நடந்த கடிதப் போக்குவரத்து:—

சென்னை, 24-8-44.

திராவிடநாட்டு மாபெருந்தலைவரவர்கட்கு வணக்கம்.

சேலத்தில் நடைபெறும் 16வது நீதிக்கட்சி மாகாண மாநாடு தாங்கள் வகுக்கும் வழியே முயன்று நாட்டுக்கு நன்மை பயக்குமென்பதில் ஐயமில்லை. ஏனெனில் இம்மாநாடு "திராவிடஸ்தானுக்கு" அடிகோலும் முதல் மாநாடு என்பது என் தோற்றம். எனவே மாநாடு வெற்றி பெற விரும்புகிறேன்.

அவ்விடத்திலுள்ள எங்கள் ஜில்லா, தாலூகா, கிராமசபைகளை தங்கள் மாநாட்டில் கலந்து கொள்ளுமாறு அறிக்கை விடுத்துள்ளேன். அவசியம் கலந்து கொள்ளுவார்கள்.

தென்னாட்டில் சில பகுதிகளிலுள்ள எங்கள் மக்கள் மனதை திருப்பாபுலியூர் மாநாட்டில் சிறிது புண்படச் செய்திருக்கிறீர்களென எனக்குப் பல கடிதங்கள் வந்துள்ளன. "கம்மாளர்கள் தங்களை விஸ்வப் பிராமணர்களென்று சொல்லிக் கொள்கிறார்கள். அவர்கள் வீட்டில் பிச்சைக்காரர்கள்கூட சாப்பிட லாயக்கில்லை" என்று தாங்கள் அங்கு கூறினீர்களாம். 'தினசரி' பத்திரிகையிலும் அது சம்மந்தமான கலவரம் வெளிவந்திருக்கிறது.

நிரபராதியான எங்கள் சமூகத்தை—தங்கள் முழு அன்பிற்குப் பாத்திரமான இந்தசமூகத்தை—தங்கள் ஆதரவை மிகமிக நாடியுள்ள ஒரு தொழிற் சமூகத்தை—தங்களடிச்சுவடுபற்றி நடக்க எண்ணியுள்ள சமூகத்தை—ஆயிரக்கணக்கான மக்கள் ஆங்காங்கு தங்களைப் பல்வழியிலும் கொண்டாடிப் புகழ்ந்துள்ள அன்புமயமான எங்கள் சமூகத்தை முதறிஞரான தாங்கள் வீணே இவ்வாறு இகழ்ந்து கூறவேண்டிய அவசியம் என் ஏற்பட்டதென எனக்குஉண்மையிலேயே விளங்கவில்லை.

ஆகையால் இம்மாநாட்டில் ஒரு தக்க சந்தர்ப்பத்தில் இதைக் குறித்து இரண்டொரு இரக்கமொழிகள் கூறுவீர்களாயின் எங்கள் சமூக மக்களின் மனக்கசப்பு அகன்று விடுமென தங்களுக்கு உறுதி கூறுவேன். தாங்கள் தனிப்பட்ட முறையில் என் மீது வைத்துள்ள அன்பும் நிதரிசனப்படுத்தப்படும்.

பிழையிருப்பின் பொறுத்தருள்க. மாநாடு சிறந்து வெற்றி பெறுவதாகுக!

இங்ஙனம் தங்கள் அன்பிற்குரிய,
தி. மு. தெய்வசிகாமணி,
(பிரசிடெண்டு)

---

E. V. Ramasamy,
President,
(Justice party)

ஈரோடு, 1-9-44.

அன்புள்ள ஐயா அவர்களுக்கு, ஈ. வெ. ராமசாமி வணக்கம். தங்கள் அன்பும் ஒற்றுமையும் நிறைந்த கடிதம் பெற்றேன்.

அது என்னை மிகவும் வருத்திவிட்டது. என்றாலும் தங்களை இரண்டொருவர் தப்பபிப்பிராயம் அடைய புரட்டிப் பேசி இருக்கிறார்கள். நான் வழக்கமாகப் பேசிவருவது தங்களுக்குத் தெரியும். அதாவது "பார்ப்பனர் மேல்சாதி என்பதை நம் மக்கள் யாவரும் ஒப்புக்கொள்ளுகிறார்கள். அவர்களைப்போல் நடக்கவும் முயற்சித்து பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், என்று தங்கள் தங்கள் சாதிக்குப் பெயரும் வைத்துக்கொள்கிறார்கள். ஆனால் அதை பார்ப்பனரும் ஒப்புக்கொள்வதில்லை—நாமும் நம்மில் அந்த ஒரு சாதியாரல்லாத மற்றவர்கள் ஒப்புக்கொள்வதில்லை; சமமாய் புழங்குவதுமில்லை. அதிகம் சொல்வானேன் இந்த வகுப்புகளில் ஒரு சாதி பிச்சைக்காரன் மற்ற சாதியார்வீட்டில் சாப்பிடுவதுகூட இல்லை. உதாரணமாக, விஸ்வபிராமணர், வன்னியகுல க்ஷத்திரியர், பாண்டிகுல க்ஷத்திரியர், அல்லது அக்கினிகுல க்ஷத்திரியர், வாணியவைசியர்கள் நகரத்து வைசியர்கள், தேவாங்கப் பிராமணர்கள்—சௌராஷ்டிரப் பிராமணர்கள் ஆரிய வைசியர்கள் இவர்கள் ஒருவருக்கொருவர் சாப்பிடுகிறார்களா அல்லது இவர்களால் சூத்திரர்கள் என்பவர்களாவது இவர்கள்வீட்டில்சாப்பிடுகிறார்களா—இப்படி நாம் பிரிந்திருக்கிறோமே—வேறுபட்டிருக்கிறோமே" என்று பேசினேன். இதற்கு ஒரு படையாச்சி வன்னியரைப் பற்றிப் பேசாதே என்றார். ஒரு ஆச்சாரியார் விஸ்வப் பிராமணாளைப் பற்றிப் பேசாதே என்றார். போலீசார் மிரட்டினார்கள். அடங்கிவிட்டார்கள். இதுதான் திருப்பாப்புலியூரில் நடந்த சேதி. இதை தங்களுக்கு யாரோ தப்பாய் தெரிவித்திருக்கிறார்கள் என்றாலும் இதற்கு தங்கள் மனம் புண்பட்டதற்கு நான் மிகுதியும் வருந்துகிறேன். என் முயற்சிக்கு உங்கள் ஆதரவையும், ஒற்றுமையையும் விரும்பி, தங்கள் தயவை நாடும் நான் தங்களையாவது, தங்கள் வகுப்பில் ஒருவரையாவது மனம் புண்படச் செய்ய கருதுவேனா? ஆகையால் தயவு செய்து தப்பபிப்பிராயத்தை விட்டுவிடும்படி மிகவும் வேண்டிக்கொள்கிறேன். தாங்கள் சம்மதம் கொடுத்தால் தங்கள் கடிதத்தையும் இதையும் பத்திரிகையில் பிரசுரிக்கிறேன்.

தங்களன்புள்ள
ஈ. வெ. ராமசாமி.

---

சென்னை 4-9-44

திராவிடநாட்டுத் தனிப்பெருந் தலைவரவர்கட்கு வணக்கம் மிகப்பல.

தங்கள் 1-9-44-ம் தேதிய விளக்கக் கடிதம் கண்டின்புற்றேன். தாங்கள் எழுதியுள்ளவாறு கூறியிருப்பதில் குற்றம் காண்கிலேன். இவ்விஷயம் மலையாகக் காட்டப்பெற்றமையால் தங்களுக்கு வீண் சிரமம் கொடுத்ததற்கு மன்னிக்கவும்.

என் உள்ளக்கிடக்கை தங்கள் முயற்சிகளின் வழியே படிந்து கிடப்பதை எங்கள் சமூக மக்கள் உணர்ந்து நடந்து கொள்ள வேண்டுமெனும் அவா எனக்கு மிகவுண்டு. தாங்கள் குறிப்பிட்டுள்ளபடி நமது கடிதங்களையும், விளக்கத்தையும் பத்திரிகையில் தயைசெய்து வெளியிடுவீர்களாயின், எங்கள் மக்கள், என்னிலும் தங்களுடன் ஒத்துழைக்க முற்படுவார்களென்பது திண்ணம்.

நாம் இன்றிருக்கும் அரசியல் நிலைமை மெல்லிய மணல்மேடு போன்றதாகும். அதனை ஒரு கெட்டித் தளமாக்க வேண்டுமென்பதே தங்கள் உறுதிப்பாடு. எனவே யாமும் எமது சமூக மக்களும் தங்கள் முயற்சிக்கு ஒத்துழைமை காட்ட வேண்டுமென்பது தங்கள் முழு நோக்கமென்பதை யானறிவேன். எங்கள் சமூக மக்களும் அதனை நன்கறிந்துகொள்ளச் செய்யுங்கள்.

இங்ஙனம்,
தங்கள் அன்பிற்குரிய
தி. மு. தெய்வசிகாமணி,
தெ.இ.வி. மத்திய போர்டு பிரசிடெண்டு.

---

பல நாட்களாக ஒத்துழைத்த தோழர்களான ஈ. எம். நமச்சிவாயம், என். ராஜு, செல்லையா, கெம்பையா, ஆர். டி. முத்து, லூர்துசாமி, வசந்தன் முதலியோர்களுக்கு எங்கள் கழகத்தின் சார்பாக நன்றியறிதலை தெரிவித்துக் கொள்கிறேன்.

என். ஆர். சந்தானம்.

---

குளித்தலை: 1-9-44ல் நடைபெற்ற குளித்தலை தமிழ் மாணவர் கழக விரிவுரைக் கூட்டத்தில், தமிழ் நாட்டில் தமிழ் இசைப்பயிற்சி மிகுதியாக பெருகுதல்தான் தமிழரும் தமிழும் மேன்மைக்கு வர வழியுண்டு என்றும், சென்னைப் பல்கலைக் கழகம் தொடங்கியுள்ள "சங்கீத சிரோமணி" இசைவகுப்பில் 66-பாடல்களில் 64-தெலுங்காக இருப்பதை கண்டிப்பதாகவும் தமிழிசைக்கு முதல் இடம் தரவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

ரோஜா முத்தையா

## ஆரிய அடிமைகளுக்கு அறிவுறுத்தல்

(கஜேந்திரன்)

தோழர்களே,

இன்னுமா உறக்கம், கள்ளுண்ட போதை. இன்றைய நிலைமையைக் கண்கூடாகப்பார்த்திருந்துங்கூடவா, மலரிலுள்ள மதுவை உண்ட வண்டுகள்போல் ஆரியத்தில் மூழ்கி, ஆரியத்திற்குத் தெரிந்தோ, தெரியாமலோ தொண்டு செய்து கொண்டு இருக்கிறீர்கள்.

தம் உயிரைக்கொடுத்தாகிலும் மானத்தைக்காப்பாற்றின வீரர் வாழ்ந்த, வெற்றி முரசு ஒலித்த திராவிடத் திருநாட்டில் தோன்றியவர்களல்லவா நீங்கள்! நமது நாட்டின் இன்றைய நிலை யென்ன என்பதை யோசித்துப்பாருங்கள்.

இந்த நாளில் தமிழ் நாட்டில் தமிழன் தமிழ் இசை கேட்க ஆவல் கொள்கிறானென்றால் அதற்கு ஓர் எதிர்ப்பா? இன்று தமிழ் மகன் தமிழ்மொழியைத் தூய நிலையில் பிறமொழிக் கலப்பின்றி பேசவேண்டுமென்று விரும்புவதோர் குற்றமா? இன்றையத்தினம் தமிழன் தன் மூதாதையரைப்பற்றிய வீர சரிதங்களை, ஆரியப் பொய்யும், புரட்டும் மலிந்த ஆபாசக்கதைகளை நீக்கி, நாடக வாயிலாகக் காணவேண்டுமென்றால் அதற்கோர் கூப்பாடா? அந்தோ, தக்கார்க்குத் தகவுதரா இத்தமிழகத்தின் தாழ்ந்த நிலையைக்காணீர்!

திராவிடர்களாகிய நீங்கள் ஏன் மானங்கெட்டு ஆரிய தாசர்களாக இருக்க வேண்டும்? மேலும் உங்கள் இனநலத்தை அடகு வைத்து நாட்டுப் பிரிவினைக் கிளர்ச்சி எதிரிகளாக வேலை செய்கிறீர்களே—இஃதென்ன மானமற்ற, மதியற்ற தன்மை. மானத்தையும், மதியையும், வீரத்தையும் ஆரியர்களின் திருவடிகளிலே சமர்ப்பித்து விட்டதென்ன கொடுமை!

எனவே, இன்றாகிலும் இதுவரை மதுவுண்ட மயக்கத்திலிருந்ததை விட்டொழித்து, நமதரும்பெருந் தலைவர், திராவிடச் செம்மல், செந்தமிழ்நாட்டுத் தண்டமிழ் பெரியார் அவர்கள் தட்டியெழுப்புவதை நோக்குங்கள். அடிமைத் திராவிடம் இன்பத்திராவிடமாக ஆக்க முயலுங்கள்; சோம்பலை உதறித் தள்ளுங்கள்; திக்கெட்டும் செல்லுங்கள். 'சேராவாரும் சகத்தீரே, திராவிடர் கழகமதில்' என்று முழக்கம் செய்யுங்கள். நீங்கள் யாவரும் நடமாடும் திராவிடர்களாக மாறி அஞ்சாநெஞ்சம் படைத்த வீரர்கள் என்பதை நிலை நாட்டுங்கள்.

கொட்டுக வெற்றி முரசு!
சுயமரியாதை வாழ்வே சுகவாழ்வு!!
வாழிய பெரியார்!!!

இரண்டாம் போர்முனை!
மூன்றாம் போர்முனை!!
நான்காம் போர்முனை!!!
ஐந்தாம் போர்முனை!!!!

★

இவைகளுக்கெல்லாம்
போதிய உதவிகள் வேண்டும்

ஆகவே
இன்னும் அதிகமான
பணம் தேவை

★

மே. த. கவர்னரின்
யுத்த நிதிக்கு
தாராளமாக பணம் கொடுங்கள்

## ராஜேஸ்—சௌந்தரா திருமணம்

மாயவரம்: வர்க்காடு தோட்டக்காரரும் பிரபலஸ்தருமான தோழர் எம். எஸ். பி. நாடார் அவர்களின் மூத்தப்புதல்வர் தோழர் எம். எஸ். பி. ராஜேஸுக்கும் பொறையார் தோழர் வி. கனகசபை நாடார் மகள் தோழர் சௌந்தராவுக்கும் 30-8-44-ல் மாயவரத்தில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது. ராவ்பகதூர் வி. வி. ராமசாமி அவர்கள் திருமணத்தை நடத்திவைத்தார். பெரியார் ஈ. வெ. ராமசாமி முதலிய பலர் வந்திருந்தார்கள்.

## தோழர் ராஜமன்னாருக்குப் பாராட்டு

சென்னை: 4-9-44ல் நடைபெற்ற சென்னை நகர வைர வியாபாரிகளின் சங்கக்கூட்டத்தில் சென்னை அட்வகேட் ஜெனரல் தோழர் ராஜமன்னார் நாயுடு அவர்கள் பாராட்டி உபசரிக்கப்பட்டார். ஷை கூட்டத்திற்கு தோழர் வி. வி. சீனிவாசய்யங்கார் தலைமை வகித்தார்.

## திருப்பத்தூர் திராவிட கழகம்

திருப்பத்தூர் (வ. ஆ) செப். 7—
10-9-44ந் தேதி ஞாயிறு மாலை 4-மணிக்கு இவ்வூர் கச்சேரி தெரு பாடசாலையில் ஷை கழகத்தின் (ஜெனரல் பாடி) கூட்டம் ஒன்று நடைபெறும். அது சமயம் பல முக்கியவிஷயங்கள் விவாதத்திற்கு வரும். ஆகையால் எல்லா திராவிடர்களும் வரக்கோரப்படுகிறது என்றும் ஷை கூட்டத்தில் கலந்து கொள்ளாத நபர்களை நிர்வாக கமிட்டியில் சேர்த்துக்கொள்ள முடியாது என்றும், தோழர் வி. எம். ராசமாணிக்கம் தெரியப்படுத்துகிறார்.

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

# குடி அரசு

1944-௵ செப்டம்பர்-மீ 9-உ

## குறும்புத்தனமான அறிக்கைகள்

சேலம் மாநாடு முடிந்த பிறகு பத்திரிகைகளில் சிலர் குறும்புத்தனமான அறிக்கைகள் விட்ட வண்ணம் இருக்கிறார்கள். நம் எதிரிகளான பார்ப்பனர் முதலிய பத்திரிகைக்காரர்கள் இச் சமயத்தைத் தங்களுக்கு அனுகூலமாக ஆக்கிக்கொண்டு அதற்கு விஷமத்தனமான பெரிய தலைப்புக்கொடுத்து அதிகவிளம்பரம் செய்து வருகிறார்கள். நம்இயக்கம் செய்யவேண்டிய வேலைகளும் அது அடையவேண்டிய வெற்றிகளும் இந்த இரு கூட்டத்தினால் தடைபட்டுப் போய் விடாது என்கின்ற தைரியத்தாலேயே அவைகளை நாம் பிரமாதமாக லட்சியம் செய்வதில்லை என்பதோடு நம் உண்மைத் தோழர்களும் மதிக்கமாட்டார்கள் என்பதும் நாம் அறிவோம்.

மாநாட்டில் மூன்றாகிய முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன.

அவை, திராவிட மக்கள் திராவிட கழகத்தின் சார்பாய் திராவிடநாட்டுப் பிரிவினையைக் கேட்பது, சமுதாயத்தில் மாறுதல் ஏற்படவேண்டும் என்பது, கட்சி மதிக்கப்பட வேண்டும் என்பது ஆகியவையாகும்.

இவற்றுள் புதிய சங்கதி ஒன்றுமில்லையாது. 1940ம் வருடம் திருவாரூரில் கூடிய மாகாண மாநாட்டில் நாம் இந்துக்கள் அல்ல இந்தியர்கள் அல்ல என்றும், திராவிடர்கள் என்றும், நம் சமயம் திராவிட சமயம் என்றும், இந்துக்கள் என்று சொல்லக்கூடாது என்றும் தீர்மானித்து இருக்கிறோம்.

அன்றியும் இந்தியா என்கின்ற ஒரு நாடு இல்லை என்றும், அது ஒரு கண்டம் என்றும், அந்தப் பெயர் பழமையானதோ சரித்திர சம்பந்தமானதோ திராவிடர்களுக்குப் பொருத்தமானதோ அல்ல வென்றும், பேசி நம்நாடு சரித்திர சம்பந்தமான தனி நாடு என்றும் மக்களுக்கு விளக்கி வந்திருக்கிறோம்.

இப்படிப்பட்ட நம்மை தென் இந்தியர் என்றும் நம் கழகத்தை தென் இந்தியர் கழகமென்றும் சொல்லிக்கொள்வது பொருத்தமாகுமா என்பது முதலில் யோசிக்கத்தக்கதாகும்.

இரண்டாவதாக இந்தப்பெயரை மாற்ற இந்த மாநாட்டிற்கு அதிகாரம் உண்டா என்றும் விஷயம் யோசிக்கத்தக்கதாகும்.

சேலம் மாநாடு கட்சியின் பொது (மாகாண) மாநாடேயாகும். இதில்தான் கட்சி சம்பந்தமான எல்லா காரியங்களும் செய்யப்பட வேண்டியதாகும். சட்டங்கள், விதிகள், கொள்கைகள், திட்டங்கள், தலைவர் நியமனம், அவரது அதிகாரம் முதலியவைகளும் கட்சியின் லக்ஷியத்துக்கு ஏற்ற காரியங்கள் வரவற்றைப்பற்றியும் யோசித்து முடிவு செய்வதும், கட்சி வேண்டுமா வேண்டியதில்லையா என்பதும் முதலாகிய எல்லா காரியங்களும் செய்யத்தக்கவுரிமை இதற்கே இருக்கிறது. மற்றக் கூட்டம் எதுவானாலும் எப்படிப்பட்டதானாலும் அதில் செய்யப்படும்தீர்மானங்கள் இந்த மாநாட்டிற்கு சிபார்சு செய்வதும் இந்த மாநாட்டு முடிவை எதிர்பார்த்து இதனுடைய சம்மதத்தையும் எதிர்பார்த்து முடிவு செய்யப்படவேண்டியதாகும். ஆகவே சேலத்தில் நடந்த மாநாட்டில் செய்யக்கூடாத வேலையோ தீர்மானமோ வேறு எந்தக்கூட்டத்திற்கும் வேறு யாருக்குமே செய்ய அதிகாரம் இல்லை என்று தான் சொல்லவேண்டும்.

அன்றியும் மற்றொரு விஷயமும் ஞாபகப்படுத்துகிறோம்.

தோழர் சத்தியார் காங்கரஸுக்கு வரும் முன் நம் நாட்டில் காங்கரசுக்கு சென்னை மாகாண காங்கரஸ் சபை என்று பெயர் இருந்தது. பிறகு சத்தியார் காங்கரஸ் தலைவரான பின்பு அது மாறி தமிழ்நாடு காங்கரஸ் சபை என்கின்ற பெயர் ஏற்பட்டது. அதுபோலவே ஆந்திர, கர்நாடக, கேரள என்கின்ற பெயர்கள் புதிதாக இடப்பட்டிருக்கின்றன.

ஆகவே ஒரு சபைக்கு, பெயர் மாற்ற அச்சபை பொது மாநாட்டிற்கு அதிகாரம் இல்லை என்று சொல்லுவது அறிவுடையதாகாதென்றே சொல்லுவோம்.

அடுத்த ஆட்சேபணை போதிய நோட்டீசு (அறிவிப்பு) இல்லை என்பது. இது பரிசீலிக்கத்தக்கதே யாகும்.

நோட்டீசு இல்லாமல் மாநாடுகளில் எத்தனையோ தீர்மானங்கள், எத்தனையோ மாகாண மாநாடுகளில் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன என்றாலும் அந்த முறையையோ, பாத்தியதையையோ இப்பேர் மாற்றத் தீர்மானத்திற்கு நாம் உரிமை பாராட்டவில்லை.

இத்தீர்மானமானது முறைப்படி சேலத்தில் 10 மாதங்களுக்கு முன் கூட்டப்பட்ட நிர்வாகசபைக் கூட்டத்தில்—தோழர்கள் இரத்தினசாமி, செட்டோ அவர்கள் வீற்றிருந்த கூட்டத்தில், செட்டோ அவர்கள் ஆதரிப்பின் பேரிலேயே "தென் இந்திய நல உரிமைச் சங்கம் என்பதை திராவிடர் கழகம் என்று அழைக்கப்பட வேண்டும்" என்பதாக ஏகமனதாக தீர்மானித்து 'இத்தீர்மானத்தைமாகாண பொது மாநாட்டுக்கு இக்கமிட்டி சிபார்சு செய்கிறது' என்று தீர்மானித்திருப்பதோடு 'அப்படி கூட்டப்படும் மாகாண மாநாட்டை சேலத்தில் நடத்தவேண்டும்' என்றும் அந்த வினாடியிலேயே மாநாட்டை அழைத்தவர்கள் இதே தோழர்கள் இரத்தினம் பிள்ளையும், செட்டோ அவர்களுமே ஆவார்கள்.

அன்றியும் சேலம் நிர்வாக சபைக் கூட்டத்திற்கு பிறகு கூட்டப்பட்ட பல ஜில்லா தாலூகா மாநாடுகளில் இத்தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு காரியாலயத்திற்கு அனுப்பப்பட்டிருக்கின்றன.

இவை மாத்திரமல்லாமல் 27-8-44-ல் நடந்த சேலம் மாநாட்டிற்குக்கூட மாநாட்டாரின் அறிக்கைப்படி இது சம்பந்தமாக பல ஸ்தாபனங்களிலிருந்தும், தனிப்பட்டவர்களிடமிருந்தும் தீர்மானங்கள் வந்திருக்கின்றன. இந்த 10 மாத காலமாக இவை பத்திரிகைகளிலும் விளம்பரப்படுத்தப்பட்டிருக்கின்றன. இனி எந்த விதமான முன் அறிவிப்பு (நோட்

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

டஸ்) வேண்டுமென்று இவர்கள் கருதுகிறார்கள் என்பது நமக்கு விளங்கவில்லை.

அன்றியும் விஷயாலோசனைக் கமிட்டிக் கூட்டத்தின் போது இந்த ஆக்ஷேபணைக்காரர்கள் இருந்து இத்தீர்மானம் நிறைவேற்றப்படும் போது ஒரு அதிருப்தியும் காட்டாமல் ஆதரவாளர்களாக இருந்து விட்டு, வேறு காரியங்களுக்கு ஆக ஒழுங்குமுறை நடவடிக்கைத் தீர்மானம் நிறைவேறியவுடன் அத்தீர்மானம் தங்கள் மீதும் நடவடிக்கை எடுத்துக் கொள்ள இடமிருக்கிறதென்று கருதி பயந்துபோய் அதிலிருந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்ள ஒரு தந்திரமாக இந்த சாக்கை ஒரு சிலர் உபயோகிக்கபின்னால் யோசனை செய்து கண்டுபிடிக்கப் பட்டதல்லாமல் இதில் வேறு உண்மையோ, நியாயமோ, காரணமோ என்ன இருக்க முடியும் என்று கேட்கின்றோம்.

இவைகள் எல்லாம்ஒருபுறமிருக்க இக்கட்சிக்கு ஜஸ்டிஸ் கட்சி என்கின்ற பெயரை யாரும் மாற்றி வேறு பெயர் வைக்கவில்லை என்பதையும் அந்தப் பெயரால் அழைக்கப்படுவதற்கு இனியும் எவ்வித ஆட்சேபணையும் இல்லை என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

இரண்டாவதான தீர்மானம் சமுதாய சம்மந்தமானது.

அது குறித்தும் இதே விஷமக்காரர்களில்சிலர் அறிக்கையில் "ஜாதிமத சம்மந்தமான தீர்மானங்கில இம்மாநாட்டில் செய்யப்பட்டிருக்கிறது. ஜஸ்டிஸ் பார்ட்டி அரசியல் பார்ட்டியே ஒழிய சமுதாய சம்மந்தமான பார்ட்டி அல்ல. ஆதலால் அது கூடாது" என்று சொல்லப்பட்டிருக்கின்றது.

இது கட்சியின் கொள்கைகளையும், திட்டங்களையும் அறியாத மக்கள் கூற்று என்றோ அறிந்தவர்களானால் வேண்டுமென்று விஷமத்தனத்திற்கு ஆலோசனையக் குறைவான கருத்தின் மீது வெளியிடும் அறிக்கை என்றோ தான் சொல்லத்தக்கதாகும். "ஜஸ்டிஸ் கட்சி எனும் தென் இந்திய நல உரிமைச் சங்கம் என்பது ஒரு பொது அரசியல் கருத்துக்கே ஏற்பட்டதல்ல என்பதும் அது ஒரு வகுப்பு அல்லது ஒரு இனத்தின் முற்போக்குக்கும் விடுதலைக்கும் ஏற்பட்டது என்பதும் அக்கட்சி ஆரம்பித்த பெரியோர்களால் ஏற்படுத்தப்பட்ட கொள்கை, விதி, முறைகள் ஆகியவைகளைப்பார்த்தாலே யாவருக்கும் நன்றாய் விளங்கும்.

தென் இந்தியன் என்றால் யார்? பார்ப்பனரல்லாதார் என்றால் யார்? சர்க்காரோடு சதா பார்ப்பனரல்லாதார், பார்ப்பனரல்லாதார் என்றுப் போராடு கட்சியின் மிமோராண்டம், வேண்டுகோள், அறிக்கை அனுப்பியிருப்பதின் கருத்து என்ன? இக்கட்சியில் "பார்ப்பனரல்லாதார் தான் அங்கத்தினராயிருக்கலாம்" என்று ஆதியில் விதி முறை ஏற்படுத்தியிருந்ததின் கருத்து என்ன? என்றெல்லாம் பார்த்தால் ஜாதிமத பிரச்சினை கட்சிக்குள் வரப்படாதென்பது அறிவுடைமையா அல்லது நாணையமுடைமையா என்பது விளங்கவில்லை.

மேலும் கட்சியின் கொள்கைகளில் அதை ஆரம்பித்த காலத்திலேயே குறிப்பிட்டு இருக்கும் நோக்கம் விதிகள் பலவற்றுள் ஒன்றில் "இக்கட்சி தென் இந்தியர்கள் எல்லோரையும் ஒரு ஜாதியாக உருக்கி வார்த்தது போல் செய்யவேண்டும்". "......as well as by social amelioration and reorganisation with a view to the ultimate fusion of all castes".

என்று தெளிவாக வாக்கியம் அமைக்கப்பட்டிருக்கிறது.

இந்த நோக்கத்தின்படி இந்த விதியின்படி காரியங்கள் நிறைவேற்றப்படவேண்டுமானால் என்ன செய்யவேண்டும்? இதிலிருந்து ஜஸ்டிஸ் கட்சி அரசியல் கட்சியா சமுதாய சீர்திருத்தக் கட்சியா என்று யோசித்துப்பாருங்கள்.

அன்றியும் 1940ல் திருவாரூர் மாநாட்டில் இந்த மேற்கண்ட நோக்கத்தைக் கருதியே மூன்று தீர்மானங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. அவை,

ஒன்று 18-வது தீர்மானம், மற்றொன்று 26-வது தீர்மானம், மற்றொன்று 27-வது தீர்மானம்.

18-வது தீர்மானத்தில் "நாம் நம்மை இந்து என்று சொல்லக்கூடாது. திராவிடர் என்றே சொல்லவேண்டும். இந்து மதம் என்று சொல்லக் கூடாது திராவிட சமயத்தவர் என்றே சொல்ல வேண்டும் என்று இந்த மாநாடு வேண்டிக் கொள்ளுகிறது" என்பதாகவும்,

26-வது தீர்மானத்தில் "இந்து லாவை திராவிடர்களுக்கு ஏற்ற வண்ணம் திருத்தி வேறு சட்டம் ஏற்படுத்தவேண்டும் என்று இம்மாநாடு தீர்மானிக்கிறது" என்பதாகவும்,

27-வது தீர்மானம் "ஆரிய ஆட்சியாலும் ஆரிய மத ஆதாரங்களாலும் திராவிட சமூகத்திடை நுழைக்கப்பட்ட சமுதாய உயர்வு தாழ்வு வேற்றுமைகளை வேரோடு களைந்து எறியவேண்டும் என்றும், திராவிடர்களுக்கு உள்ளாகவே இன்று காணப்படும் உயர்வு தாழ்வுகளும் நீக்கப்படவேண்டும் என்றும், இவைகளை ஒழிப்பதற்கு ஆக தகுந்த வழிகளை வகுத்து கையாளத்தகுந்த நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று இம்மாநாடு வற்புறுத்துகிறது"

என்பது ஆகவும் தீர்மானங்கள் செய்யப்பட்டிருக்கின்றன.

இதைப் பார்த்த பின்னாவது ஜஸ்டிஸ் கட்சி எதற்கு ஆக ஏற்பட்டது, அதன் கொள்கைகள் எப்படிப்பட்டது, அதன் வேலைத் திட்டம் எப்படி இருக்கவேண்

---

# "ஜஸ்டிசைட்"

'ஜஸ்டிசைட்'என்கிற ஆங்கில வாரப்பத்திரிகை கூடிய விரைவில் ஈரோட்டிலிருந்து வெளிவரும்.

மானேஜர்

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

டும் என்பனவாகியவைகள் எவ்வளவு சாதாரண அறிவாளிக்கும் விளங்காமல் போகாது.

இவை ஒருபுறம் இருக்க இந்த அறிக்கை வீரர்கள் "சேலம் மாநாடு ஒழுங்கு முறைப்படி நடக்கவில்லை" என்று மற்றொருகுறை கூறுகிறார்கள்.

சேலத்தில் மாநாடு நடத்த திருவாரூர் மாநாட்டில் அனுமதி அளிக்கப்பட்டிருக்கின்றது; சேலத்தில் நடந்த நிர்வாகசபைக் கூட்டத்தில் தோழர்கள் இரத்தினசாமி, செட்டேர ஆகியவர்கள் நிர்வாகக்கூட்டம் செல்லும்படியுள்ளதாக ஒப்புக்கொண்டு நேரில் கலந்து கொண்டதுடன் மாநாட்டை சேலத்தில் கூட்ட அழைத்து அனுமதி பெற்றார்கள். அதன்படியே முயற்சி செய்து சேலத்தில் மாநாட்டுக்கு வரவேற்பு கழகம் அமைத்து அதற்கு தோழர் இரத்தினசாமி தலைவராகவும், தோழர் செட்டேர காரியதரிசியாகவும் தெரிந்தெடுக்கப்பட்டு மகாநாட்டை நடத்தி இருக்கிறார்கள். பிரதிநிதிகளை வரவேற்று இருக்கிறார்கள்.

இதற்கு பொதுவசூல் சுமார் 4000 ரூபாயும் பிரதிநிதி முதலிய டிக்கட் விற்பனை வசூல் சுமார் 6000 ரூபாயும் ஆக பத்து ஆயிரம் ரூபாய்க்குமேல் பணவருவாயும் ஏற்பட்டிருக்கிறதாக தெரிகிறது. தலைவரை பிரேரேபித்தவர் ஆமோதித்தவர்கள் தோழர்கள் இரத்தினசாமி, செட்டேர முதலியவர்கள் ஆவார்கள். மாநாட்டில் நிறைவேறிய எல்லா தீர்மானங்களும் விஷயாலோசனைக் கமிட்டியில் தோழர்கள் செட்டேர, ரத்தினசாமி முதலிய ஆக்ஷேபணை அறிக்கை வீரர்கள் கலந்திருக்கவே நன்றாய் ஆலோசிக்கப்பட்டு நிறைவேறி பொது மாநாட்டில் பிரதிநிதிகளுக்குள்ள சகல உரிமையுடன் விவாதிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. அதிலும் இந்த வீரர்கள் கலந்து தொண்டு பங்கெடுத்துக் கொண்டும் இருந்தார்கள்.

தீர்மானத்தின்படி சிலர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படுமே என்கின்ற பயத்தாலும், வருங்கால தங்களுக்கு கணக்கு கேட்கப்படுமே என்கின்றகவலையாலும் தப்பித்துக்கொள்ளமுயற்சிக்கும்சிலர்களுக்குவழியாக கண்டு பிடிக்கப்பட்ட பல விஷம அறிக்கைகளைவிடுகிறார்கள் என்பதைத் தவிர மற்றப்படி ஆக்ஷேபணைக்காரர்கள் அறிக்கைகளில் வேறு உண்மையோ, நியாயமோ, காரணமோ என்ன இருக்கிறது என்பதைவாசகர்களே பார்த்துக்கொள்ளட்டும். அவர்களுடைய அறிக்கைகளில் "தலைவரைத் தள்ளிவிட்டோம்" "அந்தக் கழகத்திலிருந்து விலகிவிட்டோம்" என்பன போன்ற வார்த்தைகளைக் கொண்டு தங்கள் நடத்தையைப்பற்றிக் கேட்க தலைவருக்கோ கழகத்திற்கோ அதிகாரமில்லை என்ற கருத்தைக்காட்டுவதைத் தவிர வேறு கருத்து ஒன்றும் இல்லை என்பதுதான் விளங்குகிறது. எந்நாளும் இந்த அறிக்கை வீரர்களின் கூட்டத்தில் உள்ள மக்களின் பெரும்பாலோர் நடத்தையும் தன்மையும் காரணமும் பொது மக்கள் உணர்ந்ததேயாகும். ஆதலால் அதை வெளிப்படுத்த இப்போது நாம் நேரம் செலவழிக்க இஷ்டப்படவில்லை. எல்லோருடைய "ஜாதகமும்" பின்னால் வெளியிடப்படும். ஆதலால் பொது மக்கள் இப்படிப்பட்டவர்களின் அறிக்கைகள் விஷயத்தில் கவனம் செலுத்தாமல் திராவிட சமுதாயத்தின், மானத்திலும் மனிதத்தன்மையிலும், முன்னேற்றத்திலும், திராவிடநாடு பெற்று விடுதலை அடைவதிலும் கவலை கொண்டு மாநாட்டுக் கட்டளைப்படி பணியாற்ற வேண்டுமாய்க் கோருகிறோம்.

## அம்மாபேட்டை ஜஸ்டிஸ் தமிழர் சங்கம்

சேலம்: தோழர் எ. முருகேச முதலியார் கட்டிடத்தில் 26-8-44ல் தோழர் எஸ். என். எல்லப்பமுதலியார் தலைமையில் நடைபெற்ற ஷை சங்கக் கூட்டத்தில், ஷை சங்கத்திற்கு தலைவர் தோழர் எ. முருகேச முதலியார்தான் என்றும், தோழர் க. த. ஆறுமுக முதலியாரையாவது அல்லது வேறு யாரையாவது புதிதாக தலைவராகத் தெரிந்தெடுக்கவுமில்லை, நியமிக்கவுமில்லையென்றும், சங்கத்தில் எவ்வித பிளவும் இல்லையென்றும், தோழர் க.த. ஆறுமுக முதலியார் ஒருவாரத்திற்குள் தாம் தலைவர் என்பதை வாபீஸ் வாங்கிக்கொள்ள வேண்டும் என்றும், இல்லையேல் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், இதற்கு சங்கத் தலைவர் தோழர் முருகேச முதலியாருக்கு அதிகாரம் அளிக்கிறதாகவும் தீர்மானிக்கப்பட்டது.

## கரூரில் சுயமரியாதை மாநாடு

ஷை மாநாடு கரூர் அம்பிகா டாக்கீஸில் 24-9-44ல் நடைபெறும்.

தலைவர்: தோழர் சி.என். அண்ணாதுரை M. A.,

திறப்பாளர்: தோழர் ந. அர்ச்சுனன் (இளையகுமார பட்டக்காரர்)

கொடியேற்றுபவர்: இரா. நெடுஞ்செழியன்.

திராவிடநாட்டுப் படத்திறப்பு: பெரியார் ஈ. வெ. ராமசாமி.

## குளித்தலை திராவிடர் இளைஞர் மாநாடு

ஷை மாநாடு 17-9-44ல் குளித்தலையில் நடைபெறும்.

மாநாட்டுத் தலைவர்: பழையகோட்டை இளையகுமார பட்டக்காரர் தோழர் ந. அர்ச்சுனன் அவர்கள்.

மாநாட்டுத் திறப்பாளர்: பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள்.

மற்றும் பல தோழர்கள் முக்கிய பங்கு ஆற்றுவார்கள்.

## கொரநாடு திராவிடர் கழகம்

மாயவரம்: 30-8-44ல் தோழர் எ. துரைராஜ் நாடார் அவர்கள் தலைமையில் குடந்தை தோழர் கே. கே. நீலமேகம் அவர்கள் மேற்படி கழகத்தை திறந்து வைத்தார். குடந்தை தோழர் தவமணி இராசன் கொடியேற்றினார்.

பிறகு மாலை 7 மணிக்கு போலீஸ் ஸ்டேஷனுக்கு பின்புறம் வழக்கறிஞர் தோழர் கே. வெங்கடாசலம் பி. ஏ. பி. எல். அவர்கள் தலைமையில் நடந்த பொதுக் கூட்டத்தில் பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்கள் சேலம் மாநாடும் நமது கடமையும் என்பது பற்றி விளக்கமாகப் பேசினார். பிறகு தோழர்கள் கே. கே. நீலமேகம், வழக்கறிஞர் கே. லட்சுமிகாந்தம், வி. சின்னத்தம்பி முதலியவர்கள் பேசினார்.

## ஒத்திவைப்பு

இவ்வாரம் 11ம் பக்கத்தில் வெளிவந்திருக்கும் "அய்யம்பேட்டை திராவிட இளைஞர் மாநாடு, தலைவர்களுடைய சௌகரியத்தை முன்னிட்டு ஒத்திவைக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது. தேதி முதலிய விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

## அறிக்கை

மிழ்நாட்டில் உள்ள (ஜஸ்டிஸ் சி) திராவிடர் கழக ஜில்லா லுகா சபை காரியதரிசி க்கு ஈ. வெ. ரா. வணக்கம்.

ழர்களே!

சேலம் மாநாட்டுத் தீர்மானப் ஒவ்வொரு ஜில்லாவுக்கும் 00 அங்கத்தினர்கள் விதம் ர்க்க வேண்டும் என்றும், மிட்டி இல்லாத இடத்தில் புதிய மிட்டிகள் அமைக்கப்பட வேண் என்றும் அவர்களைக் ரண்டு ஆண்டுக்குள்ள கமிட்டி புதுப்பிக்கப்பட வேண்டும் என் ம், இவை நடந்தால் தான் புதிய வாக சபை அமைக்க முடி ம் என்றும் பேசி முடிவு செய் துக்கிறோம்.

ஆகவே இவை நடந்த பிறகு ன் தனி மாநாடு (ஸ்பெஷல் கான் ன்ஸ்) கூட்ட முடியும். அதில் ன் பட்டம் பதவி விடும் தீர்மா த்தை அமுலுக்கு கொண்டுவர ட்டளை இடமுடியும் இவை வும் சேலம் மாநாட்டு முக்கிய ர்மானங்கள் ஆகும்.

ஆகவே உங்களிடம் அங்கத் னர் புத்தகம் முன் அனுப்பி வை இருந்தால் அதில் சேலம் மாநாட்டுத் தீர்மானங்களின்படி கையொப்பம் வாங்கி அங்கத் னர்களை சேர்த்து பதிவு செய் ங்கள். இல்லாவிட்டால் இங்கு ருந்து புத்தகம் அனுப்பப் டும்.

அல்லது அங்கேயே அச்சடித் க் கொள்ள முடியுமானால் அச் சடித்துக்கொள்ளுவது நலம்.

தயவு செய்து இதை அவசர மாகவும், அவசியமாகவும் கவனிக் கும்படி வேண்டிக் கொள்ளு கிறேன்.

ஈ. வெ. ராமசாமி,
திராவிடர்கழக (ஜஸ்டிஸ்கட்சி)த்
தலைவர்.

## முத்துராஜ மாணவர்கள் சுற்றுப்பிரயாணம்

சீனிவாச நல்லூர்: முத்துராஜ மக்க ளிடையே கல்வி, நாகரிகம் சுகாதாரம் இவைகளைப் பரப்பவும் ஆக்கந்தேடவும் முத்துராஜ மாணவர்கள் 16-9-44-உ முதல் 27-9-44-உ வரை காட்டுப்புத்தூர், கரூர், தவிட்டுப்பாளையம், உத்தமிடம் பட்டி, கருப்பம்பட்டி ஆகிய கிராமங்க ளில் சுற்றுப்பிரயாணம் செய்து பிரசாரம் புரிந்தனர்.

## கேள்வி—விடை

ஒரு பட்டிக்காட்டான்:—என்ன அய் யா சேலம் மாநாட்டிற்கு பிறகு ஒருமணி நேரத்தில் வேறு மாநாடு கூட்ட 5600 ரூபாய் வசூலாகி விட்டதாமே அந்த பணம் காய்க்கிற மரம் இருக்கிறதா?

வரவேற்புக்கமிட்டி உள் ஆள்:— இல் லேப்பா, மாநாட்டுக்கு வசூலான பணமும் பிரதிநிதி டிக்கட்டு விற்ற பணமும் செலவு போக மீதி 5600க்கு மேலேயே மிச்சமிருக்குது. அதிலே அவர்கள் தய வாக வெளியில் காட்டினது தான் அந்த 5000த்துச் சில்லரை ரூபாய்

பட்டிக்காட்டான்:—சரி சரி, அந்தப் பணத்துக்குப் பிடிச்ச சனியன்தான் இந்த அறிக்கைகளோ! எனக்கு இப்பப் புரிஞ்சுது. போயிட்டு வாங்க. நீங்க ளும் வரவேற்புக்கமிட்டி மெம்பர்தானோ தேன்வழிச்சவன் புறங்கை நக்காதிருப் பானா? போயிட்டு வர்றேன்.

## ருக்மணி-வேதநாயகம் திருமணம்

4-9-44-ந் தேதி காலை $8\frac{1}{2}$ மணிக்கு ஈரோடு ஆச்சிவிலாசில் தோழர்கள் ருக்மணி—வேதநாயகம் ரிஜிஸ்டர் திரு மணப் பாராட்டுக் கூட்டம் நடைபெற் றது.

புரட்சிக்கவி பாரதிதாசன் குமாரத்தி யும், வித்வான் கண்ணப்பர் மனைவியு மான தோழர் சரசுவதி அவர்கள் தலைமை வகித்தார்.

தோழர்கள் எஸ். பழனியப்பபிள்ளை, பி. ராமசாமி இருவரும் அனைவரை யும் வரவேற்றுப் பேசினார்கள். தோ ழர்கள் டி. பி. சின்னசாமி, பி. ஷண்முக வேலாயுதம், வித்வான் கண்ணப்பன், க. அ. மணியம்மையார், பெரியார் ஈ. வெ. ராமசாமி ஆகியவர்கள் திரு மணத்தைப் பாராட்டியும், சீர்திருத்தம் பற்றியும் சொற்பொழிவாற்றினார்கள். பல தோழர்கள் வந்திருந்தார்கள்.

தோழர் பி. ஷண்முகவேலாயுதம் நன்றி கூற பகல் 1-30 மணிக்கு திரு மணம் இனிது முடிவுற்றது.

மேற்படி திருமணத்தை முன்னிட்டு "குடி அரசு"க்கு ரூ. 2-0-0 நன்கொடை வழங்கப்பட்டது.

## கோபியில் தெ. இ. ந. உ. சங்கக் கூட்டம்

கோபி: டை கூட்டம் 10-9-44ந் தேதி மாலை 8-மணிக்கு சேதுராமன் இல்லத் தில் நடைபெறும். சேலம் மாநாட்டு தீர்மானப்படி திராவிடர் கழகம் எனும் பெயர் நிர்ணயம் நிர்வாகத்தேர்தல் முத லியவைபற்றி யோசிக்கப்படும்.

## திருமணம்

திருக்குவளை: தோழர் அ. முத்து வேலுபிள்ளையின் புதல்வர் மு. கருணா நிதிக்கும் சிதம்பரம் தோழர் சுந்தரம் பிள்ளை புதல்வி பத்மாவதிக்கும் தோழர் டி. கெ. விசயராகவலு பி. ஏ. பி. எல், தலைமையில் திருவாரூர் வ-க்குவீதி, தோழர் ஆர். இராசசந்தானம் இல்லில் வாழ்க்கை ஒப்பந்தம் நிகழும்.

## பெரியார் தொண்டர்படை

4-9-44 தேதி இரவு 10 மணிக்கு நடைபெற்ற ஒரு ஆலோசனைக் கூட் டத்தில் பெரியார் அவர்களின் கொள் கைகளை தோழர் ஷண்முகவேலாயுதம் அவர்களின் உறவினர்களிடையே நடை முறையில் கொண்டுவர தோழர் பி. ஷண்முகவேலாயுதத்தை சர்வாதிகாரி யாகக் கொண்ட பெரியார் தொண்டர் படை நிறுவப்பட்டு சில ஆண், பெண் வீரர்களைச் சேர்க்கப்பட்டிருக்கிறது.

## பெங்களூரில் புதுமை திருமணம்

14-9-44-ந் தேதி மாலை 4 மணிக்கு தோழர் பூ. பார்த்தசாரதி சகோதரன் தோழர் பூ. ரங்கநாதனுக்கும் தோழர் ஜெகதம்பாளுக்கும் தங்கவயல் 'தமிழன்' பத்திரிகை ஆசிரியர் பண்டிதர் தோழர் ஜி. அப்பாதுரையார் தலைமையில் திருமணம் நடைபெறும் என தோழர் பூ. பார்த்தசாரதி எழுதுகிறார்.

* *

திண்டிவனம்: 23-8-44-ல் நடை பெற்ற திராவிடர் கழக நிர்வாகிகள் கூட்டத்தில் 23-8-44 வரை செலவு செய்யப்பட்ட செலவு ஜாபிதா டை கழ கச் செயலாளரால் [illegible]க்கப்பட்டு அங்கீ கரிக்கப்பட்டது.


"பெரியாரின்" ஆதரவைப் பெற்ற
நேஷனல் ரேடியோ ஒலி பெருக்கியை
ஏற்பாடு செய்யுங்கள்.

சமீபத்தில் ஈரோடு, கோபி, குடந்தை, தஞ்சை, கடலூர், இராசிபுரம் முதலிய இடங்களில் நடந்த திராவிட மாநாடுகளில் சிறந்த வேலை செய்திருக்கிறது.

சிறந்த ஒலி பெருக்கி ஸ்தாபனம்:

நேஷனல் ரேடியோஸ்,
பிரமன் கோவில் தெரு, கும்பகோணம்.

# தமிழ் நாட்டுச் செய்திகள்

**வீரவநல்லூர்:** திருவள்ளுவர் மிஷன் அனாதை பிள்ளைகள் கைத்தொழிற் சாலை மாணவர் சங்கம் தோழர் எம். டானியல் தலைமையில் 13-8-44ல் நடந்தது. அதுசமயம் தோழர் வி எஸ்.எம். சுப்பிரமணியன் செட்டியார் சுயமரியா தைக் கொள்கைப்படி சாதி மத பேத மின்றி இலவசமாக கல்வியளித்து வருவதைப் பாராட்டப்பட்டது.

* *

**பொன்மலை:** திராவிட வாலிபர் கழக அங்கத்தினர் கூட்டம் தோழர் எஸ். நடராஜன் தலைமையில் 15-8-44ல் நடைபெற்றது. சேலம் மாநாட்டுக்கு தோழர் பாங்குசம் தலைமையில் 100 பிரதிநிதிகளுக்குக் குறையாமல் போவதென முடிவு செய்யப்பட்டது.

* *

**மேலப்பாளையம்:** 6-8-44ல் தோழர் கே. என். பழனிச்சாமி (கரூர்) அவர்கள் தலைமையில் கரூர் தாலுகா மேலப்பாளையம் சர். ஏ. டி. பன்னீர் செல்வம் பகுத்தறிவுக் கழகத்தின் இரண்டாவது ஆண்டு விழா கொண்டாடப்பட்டது. டை சங்கத்திற்கு சந்தா நன்கொடை வரவு ரூ. 106-14-6; மொத்தச்செலவு 99-3-3; மீதியிருப்பு ரூ. 7-11-3.

அன்று இரவு தோழர் ஆர். மணி தலைமையில் சங்க உறுப்பினர்களால் "இணையற்ற வீரன்" என்ற நாடகம் நடிக்கப்பட்டது.

* *

**கோவில்பட்டி:** 12-8-44ல் தோழர் ஆர். எம். அருணாசலம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற திராவிடர் கழகக் கூட்டத்தில், திராவிடஸ்தான் பாகிஸ்தான் பிரிவினைபற்றி பல தோழர்கள் பேசினபின் ரேஷனிங் சம்பந்தமாக சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

* *

**ஈரோடு:** 12-8-44ல் தோழர் கே. வெள்ளைச்சாமி தலைமையில் நடைபெற்ற ஈரோடு மருத்துவகுல சங்கக் கூட்டத்தில், நபர் ஒன்று 4-அணா சந்தா செலுத்தவேண்டும் என்றும், ஜின்னா-காந்தி சந்திப்பில், தாழ்த்தப்பட்டோர் பிற்போக்கானவர்கள் விஷயத்தைக் குறித்து அந்தந்த தலைவர்கள் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்வதாகவும் தீர்மானிக்கப்பட்டது.

* *

**பம்பாய்:** 12-8-44ல் தாராவி, துறையூர் வாலிபர் கழகத்தின் கூட்டம் தோழர் டி. தேவதாசன் தலைமையில் கூடியது. அது சமயம், இசை நாடக நிபுணர் எம்.கே. தியாகராஜ பாகவதர், நகைச்சுவை அரசன் என். எஸ். கிருஷ்ணன், இசை அரசு எம். என். தண்டபாணி தேசிகர் ஆகிய மூன்று தோழர்களையும் திராவிடர் முன்னேற்றத்திற்காக பாடுபடும்படி கேட்டுக்கொள்வதாக தீர்மானிக்கப்பட்டது.

* *

**திருச்சி:** வக்கீல் குமாஸ்தாக்கள் சங்கத்தலைவரும் அறிவு வளர்ச்சிக் கழகத் தலைவருமான தோழர் எஸ். முத்து வீருபிள்ளையவர்களின் 60-வது ஆண்டு விழா 12-8-44-ல் தோழர் ப. நீலகண்டன் தலைமையில் கொண்டாடப்பட்டது. பல தோழர்கள் பேசினார்கள்.

* *

**சென்னை:** திருவொற்றியூர் ஆதிதிராவிடப் பொதுநலக் கழகத் திறப்பு விழா தோழர் டி. சண்முகம் அவர்கள் தலைமையில் 7-8-44-ஆம் தேதி தோழர் பாலசுந்தரம் பி. ஏ., (லேபர் கமிஷனர்) அவர்களால் திறந்துவைக்கப்பட்டது. தோழர் ஏ. எஸ். ராமன் கொடியேற்றி வைத்தார். பல தோழர்கள் சொற்பொழிவாற்றினார்கள்.

* *

**சென்னை:** ஆதிதிராவிட பொதுநல சங்கத்தில் 18-8-44 ஆம் தேதி மாலை தோழர் கே. கணேசன் அவர்களால் யுத்த கீதங்கள் பாடப்பட்டன.

* *

**பொன்மலை:** 17-8-44-ஆம் தேதி எஸ். ஐ. ஆர். தொழிலாளர் (Employee's) சங்கத்தின் ஆதரவில் தோழர் ஒய் ஆரோக்கியசாமி தேவர் தலைமையில் நடந்த பொதுக் கூட்டத்தில், எஸ். ஐ. ஆர். தொழிற் சங்கத்தார் காங்கரஸ் கம்யூனிஸ்ட் கட்சியாருடன் சேர்ந்து கொண்டு அர்த்தமற்ற கூச்சல் போடுவதைக் கண்டித்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

* *

**கோலார்தங்கவயல்:** 13-8-44 தேதி தோழர் எம். சி. துரை தலைமையில் நடைபெற்ற சமாச செடியூல்டு வகுப்பினர் கழகக் கூட்டத்தில், பொதுநிதியை முதலில் ஒரு ரூபாய்க்கு வசூல் விடுவதென்றும் பின்னர் ரூபாய் 5-க்கு மேல் விடக்கூடாதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

* *

**சீதம்பாம்:** 5-8-44ல் நடைபெற்ற தமிழர் நலஉரிமைக் கழகத்திற்கு புது வருடத்திற்கு தோழர் டி. பத்மனாபன் அவர்களைத் தலைவராகக்கொண்ட ஒரு நிர்வாகக்குழு தெரிந்தெடுக்கப்பட்டது. இக்கழகத்தை திராவிடர் கழகம் என இனி வழங்கப்படவேண்டுமென்றும், திராவிடர் படிப்பகம் ஒன்று திறந்து வைக்கவேண்டுமென்றும், அதற்கு தற்காலிகமாக தோழர் மு. க. சுந்தரம் அவர்களை இடம் கொடுத்துதவ கேட்டுக் கொள்வதாகவும் தீர்மானிக்கப்பட்டது.

* *

திருவாரூர் மருத்துவர் சங்க ஆண்டு விழாவை முன்னிட்டு 'குடி அரசு'க்கு நன்கொடையளிக்கப்பட்ட ரூ. 2-ம் டை சங்கக் காரியதரிசியால் அனுப்பப்பட்டது.

* *

**கொழும்பு:** திருநெல்வேலி ஜில்லா ஆதிதிராவிட (இலங்கைக் கிளை) மகாஜன சங்கத்தின் அங்கத்தினர் வருடாந்திரக் கூட்டம் 10-8-44-ல் தோழர் ஏ. பி. சனமுத்து தலைமையில் கூடியது. நடப்பு வருடத்திற்கு நிர்வாகஸ்தர்கள் தெரிந்தெடுக்கப்பட்டார்கள்.

* *

**புதுக்கோட்டை:** 18-8-44-ல் வாழக்குறிச்சியில் வித்துவான் தோழர் கே. கந்தசாமி ஐயர் தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் தோழர்கள் என். முத்து, அருளானந்தம் ஆகியவர்கள் தீபாவளிப் பண்டிகையைக் கொண்டாடலாகாதென்றும், பொங்கல்தான் தமிழர் பண்டிகையென்றும் விளக்கிப் பேசினார்கள்.

* *

**கொழும்பு:** இ. ஜி. ஆ. மகாஜன சங்கத்தின் தொண்டர் படை சேனாதிபதி தோழர் எஸ். இ. நல்லையா அவர்களின் பள்ளி மாணவர்களால் 9-7-44-ல் டை சங்கத்தின் ஆதரவில் நடந்தேறிய சங்கீதக் கச்சேரியின் போது 'குஸ்தி' முதலிய விளையாட்டுகள் செய்து காட்டப்பட்டன.

* *

**தாராவி (பம்பாய்)** 30-8-44ல் தோழர் எஸ். என். நடேசன் தலைமையில் நடைபெற்ற சேசுவா சமுத்திரம் ஆ. தி. முன்னேற்ற லீக்கின் 5-வது மாதாந்திரக் கூட்டத்தில் தோழர்கள் மூர்த்தி, நாயகம் முதலிய பேர்கள் பேசினார்கள்.

* *

**தூத்துக்குடி:** 27-8-44-ம் தேதி தோழர் எம். ராமசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்ற தூத்துக்குடி ஆதிதிராவிட ஐக்கிய சங்கத்தின் மாதாந்திரக் கூட்டத்தில், ஜனாப் ஜின்னாவை தோழர் காந்தியார் சந்தித்துப் பேசுவது போல் டாக்டர் பி. ஆர். அம்பேத்காரையும் சந்தித்துப் பேசவேண்டுமென்றும், ஜின்னா—காந்தி சந்திப்பின் முடிவு தங்களைக் கட்டுப்படுத்தாதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

* *

## திருமணம்

**மண்ணச்சநல்லூர்:** 4-9-44-ல் தோழர் வி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் தலைமையில் தோழர்கள் மாணிக்க அம்மைக்கும்—முனியப்பாவுக்கும் சீர்திருத்தத் திருமணம் நடைபெற்றது. தோழர் இ. பொ. வேதாசலம் அவர்கள் பேசினார்கள். திருமணத்தின் நினைவாக 'குடி அரசு' முதலிய பத்திரிகைகளுக்கு நன்கொடையளிக்கப்பட்டன.

## சென்னை சுயமரியாதைச் சங்கம்

சென்னையில், 30-7-44ல் நடைபெற்ற 5-வது சுயமரியாதை மாநாடு, 31-7-44ல் சுயமரியாதைச் சங்க நிதிக்காக நடத்தப்பட்ட சந்திரோதய நாடகம் ஆகியவைகளின் வரவு செலவு விபரம்:—

மாநாடு

நன்கொடை, வரவேற்பாளர் கட்டணம் மொ.
வரவு ரூ. 365—0—0

மண்டபம், விளம்பரம், ரயில் கட்டணம் ஆக
மொத்தச் செலவு ரூ. 300—1—9

மாநாட்டின் இருப்பு ரூ. 64—14—3

நாடகம்

டிக்கட்டு விற்பனை ரூ. 2225—8—0

சில்லரையாக
நன்கொடைகள் ரூ. 16—9—3

தோழர்கள் N.S. கிருஷ்ணன், M.K. தியாகராய பாகவதர் நன்கொடை ,, 900—0—0

ஆக வரவு ரூ. 3142—1—3

நாடக வரியும், நாடகச் செலவும் (3-நாட்கள் சாப்பாட்டுச் செலவுடன் சேர்த்து) மொ. ரூ. 1087—4—6

நாடக இருப்பு ரூ. 2054-12—9
மாநாடு ,, 64—14—3

ஆக மொ. இருப்பு ரூ. 2119-11—0

ஆகமொத்த இருப்பு ரூ. 2119-11-0 சென்னை சுயமரியாதைச்சங்கத் தலைவர் தோழர் டி. சண்முகம் அவர்கள் மூலமாக சங்க வளர்ச்சிக்கான வேலையையும், தாழமுத்து—நடராசன் கட்டிடப் பூர்த்திக்காகவும் வேண்டியன செய்ய வேண்டுமெனெ 11-8-44ல் கூடிய சென்னை சுயமரியாதைச்சங்க நிர்வாகக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

என். வி. நடராசன், காரியதரிசி.

## தமிழர் மரபுத் திருமணம்

விருதுநகர் பாலகுருகுல வித்யாலயத் தலைமையாசிரியர் தோழர் நாராயணசாமிக்கும் அருப்புக்கோட்டை பாண்டிய நாடார் மகள் தோழர் இரத்தின வல்லியம்மாளுக்கும், அருப்புக்கோட்டையில் பெண் வீட்டில், 25-8-44 காலை 8-30 மணிக்குப் பார்ப்பனப் புரோகிதரும், சடங்குகளுமின்றி தமிழர் மரபுப்படி திருமணம் சிறந்த முறையில் நடைபெற்றது. வித்துவான் சிவக்கொழுந்து பிள்ளை திருமண ஒப்பந்தங்களை நடத்திவைக்க ஆசிரியர் சா. வேதமுத்து சொற்பொழிவாற்றினார்.

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

## பச்சையப்பன் கல்லூரித் தமிழ்ச் சங்கம்

29-8-44 ஆந்தேதி மாலை 4 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் ஆற்றாண்டு விழா, 'பிரின்சிபால் வி. திருவேங்கிடசாமி பிள்ளை நினைவுப் போட்டிப் பரிசுச் சொற்போர்' இனிது நடந்தேறியது. சென்னைக் கல்லூரிகள் ஆறு, போட்டியில் கலந்து கொண்டன. 'போர் உலக நாடுகளிடை ஒற்றுமை விளைவிக்குமா' என்னும் பொருள்பற்றி விவாதமெழுந்தது.

போட்டியில் கல்லூரிகளுள் பச்சையப்பன் கல்லூரியும், மாணவர்களில் தோழர் எ. பி. ஜனார்த்தனம் பி. ஏ. (பச்சையப்பன் மாணவர்) அவர்களும் பரிசுகள் பெற்றனர்.

அவ்வமயம், ராவ்பகதூர் பி. சம்பந்த முதலியார் பி ஏ., பி. எல்., ராவ்சாகிப் கே. கோதண்டபாணி பிள்ளை பி. ஏ., தோழர் பி. சேதுப்பிள்ளை பி. ஏ., பி. எல். ஆகியோர் நடுவர்நிலைமை வகித்தனர்.

## மறைவு

மதுரை: பிரபல பாஸ்கட்பால் (Basket-Ball) ஆட்டக்காரரும் நமது இயக்கத்தோழருமான தோழர் வி. பால சுப்பிரமணியம் 18-8-44ல் இயற்கையெய்தினார் என்பதை யறிந்து வருந்துகிறோம்.

## திருப்பத்தூர் திராவிடர் கழகம்

ராமனாதபுரம் திருப்பத்தூரில், 27-8-44-ல் சேலத்தில் நடைபெற்ற ஜஸ்டிஸ் கட்சி மாநாட்டுத் தீர்மானப்படி தாலூகா தலைநகராகிய இவ்வூரில் திராவிடர் கழகம் நிறுவப்பட்டிருக்கிறது. தலைவர் தோழர் சின்னத்துரை; செயலாளர் தோழர் இமயவரம்பன்.

---

## மணமகன் தேவை

நல்ல தமிழ்ப் படிப்பும், சிவப்பு நிறமும், சுமார் 4¾ அடி உயரமும், சொற்பொழிவாற்றும் திறனும், உடற்பயிற்சியில் ஓரளவுக்குத் தேர்ச்சியும், தன் மதிப்புணர்ச்சியும், 16-வயதும் நிரம்பப்பெற்ற வெள்ளாளர் வகுப்பைச் சேர்ந்த ஓர் மணமகளுக்கு மணமகன் தேவை. மணமகன் 25-வயதுக்கு மேற்படாதவராகவும், மாதம் ரூ 50க்கு குறையாத நிரந்தர வருவாயுள்ளவராகவும், தன்மதிப்பியக்கத்தைச் சேர்ந்தவராகவும், உயரத்திலும், படிப்பிலும் சற்று கூடுதல் உள்ளவராகவும் இருத்தல்வேண்டும். கடிதப்போக்குவரத்துகள் இரகசியமாக வைத்துக்கொள்ளப்படும்.

தமிழன்
C/o
K. K. நீலமேகம்,
சுருட்டுக்கம்பெனி, கும்பகோணம்.

## திருமணங்கள்

பொன்னமக்குடி: தோழர் பொ. இ. பரமானந்தம் சகோதரர் தோழர் சந்தோஷம் அவர்களின் குமாரர் தோழர் சைமன் ராஜுக்கும் வள்ளியூர் ஜமேதார் சர்குணம் அவர்களின் செல்வி மேரியம்மாளுக்கும் மணமகள் இல்லத்தில் 8-1-1120ல் பிரிகேடியர் மாணிக்கவாசகர் தலைமையில் திருமணம் நடந்தது. 'குடி அரசு' வளர்ச்சிக்காக ரூ. 1 நன்கொடையளிக்கப்பட்டது.

• •

புலியூர்: இவ்வூர் பஞ்சாயத்து போர்டு தலைவரும் சமதியக்கப் பிரமுகருமான தோழர் பி. எ. வடிவேலம் பிள்ளை அவர்களின் மைத்துனர் அவர்களின் திருமணம், சமூகத்தார், ஊரார், உற்றார் ஆகியவர்களின் எதிர்ப்புகளையும் பொருட்படுத்தப்படாமல், பார்ப்பனியம், நெருப்பு, முதலிய எவ்வித பகுத்தறிவுக் கொவ்வாத மூடப்பழக்க சடங்குகளுமில்லாமல், புலியூர் பெருநிலக் கிழவரும், நமது இயக்கத்தில் சளைக்காது உழைத்தும் பொருளுதவிகளைச் செய்தும் தன் குமாரத்திக்கு புரோகிதமொழிந்த திருமணம் செய்வித்து வழிகாட்டியவருமாகிய தோழர் பி. பெருமாள் நாடார் அவர்களின் தலைமையில் சென்ற ஆவணி 16-ஆம் நாள் சிறப்பாக நடந்தேறியது. 'திராவிட நாடு', 'குடி அரசு' ஆகியவைகளுக்கு முறையே ரூபாய் ஒன்று நன்கொடையளிக்கப்பட்டது.

## அய்யம்பேட்டை திராவிட இளைஞர் மாநாடு

இம்மாநாடு அய்யம்பேட்டையில் 24-9-44ல் நடைபெறும். அதற்கு பெரியார் ஈ. வெ. ரா., தோழர் சி. என். அண்ணாதுரை முதலிய பலரை அழைப்பதெனத்தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது.

வரவேற்புக்கழகத் தலைவர்: சி. இராமையன்.

அமைச்சர்: சா. வீரமணி.

விளம்பர அதிகாரி: சமரசபாண்டியன்.

## பெரியார் பைகள்

தோழர் எம். எஸ். பழனிசாமியால் தயார் செய்யப்பட்ட ஜமக்காளப் பைகள், ஒரு பக்கம் 'பெரியார் வாழ்க' என்றும், மறுபக்கம் 'திராவிடநாடு திராவிடருக்கே' என்று அச்சடிக்கப்பட்டு, உறுதியாய் இருக்கின்றன. 12" அகலம், 14" உயரம், 1 டஜன் ரூ. 7-0-0, 12" அகலம், 17" உயரம், 1 டஜன் ரூ. 8-8-0, வியாபாரிகளுக்கு 15 பர்சன்ட் கமிஷன். பேக்கிங், ரயில் சார்ஜ், தபால் செலவு தனி.

கிடைக்குமிடம்: எம். எஸ். பழனிசாமி, பவானி.

## பெரியார் பிறந்த நாள் விழா

### திராவிடமெங்கும் கொண்டாடுக

நாளது 17-9-44-ம் நாளன்று பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்களுக்கு 66-வது ஆண்டு பிறந்த நாளாகும். ஆதலால் திராவிடநாட்டுச் சீர்பெருந் தலைவர் தன்னலமல்லாத் தகைமைசால் அண்ணலாம் அன்னார் தம் பேருழியத்தைப் பாராட்டுமுகத்தான் 10-9-44 முதல் 17-9-44 வரை பெரியார் வாரமெனப் பெயரிட்டு நம் திராவிட மக்கள் அனைவரும் தத்தம் இல்லங்களில் தமிழ்க்கொடி, நீதிக்கட்சிக் கொடிகளை உயர்த்திச் சிறுவருக்குத் தின்பண்டம் வழங்கி பொதுக் கூட்டங்கள் ஏற்படுத்தி பெரியார் ஈ. வெ. ரா. அவர்களின் அரிய சேவைகளைப் பாராட்டி "பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்கள் நீடுழி வாழ்க" என்ற வாழ்த்து மொழிகளை யாவரும் ஒருமுகமாகக் கூறிச் சிறப்புறக் கொண்டாடவேண்டுமெனக் கேட்டுக் கொள்ளுகிறோம் என அருப்புக்கோட்டைத் தோழர் எம். எஸ். இராமசாமி எழுதுகிறார்.

### திருமணம்

பெண்ணாகடம்: 24-8-44தேதி தோழர் செல்லப்பிள்ளை அவர்களின் குமாரர் தோழர் திருஞானசம்பந்தனுக்கும் திட்டக்குடி தோழர் கோடிப்பிள்ளை அவர்களின் குமாரத்தி தோழர் கமலாவுக்கும் பெண்ணாகடத்தில் மணமகன் இல்லத்தில் திருமணம் சிறப்பாக நடந்தது. அவ்வமயம் பல அன்பர்களால் வாழ்த்திதழ்கள் வாசித்தளிக்கப்பட்டன.

### மறைவு

பட்டிவீரன்பட்டி: பொதுநல உழைப்பாளி தோழர் ஆ. மூக்கனாடார் தமது இல்லத்தில் 82-வது வயதில் 27-8-44ல் இயற்கை யெய்தினார். டை குடும்பத்தாருக்கு தமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதாக தோழர் ப. வீரண கவுண்டர் தெரிவிக்கிறார்.

## மணமகள் தேவை

சுமாரான அழகும், படிப்பும், உள்ள முதலியார் அல்லது வேளாள வகுப்பை சேர்ந்தபெண், நல்ல அந்தஸ்தில் உள்ள ஒருவரை இரண்டாந்தாரமாக மணம்செய்து கொள்ள தேவை. கடிதப்போக்கு வரத்து ரகசியமாக வைக்கப்படும்.

விலாசம்:

C. B. T.

c/o குடி அரசு, ஈரோடு.

## பெரியார் தினத்தில்!

அவர்செய்த தொண்டுகளை உணரவும், பிறர்க்கு உணர்த்தவும் வேண்டாமா?

அப்படியானால்,

# பெரியார் பெருந்தொண்டு

என்னும் நூலை வாங்கி வாசியுங்கள்!

உங்கள் நண்பர்க்கும் பரிசாக வழங்குங்கள்!

விலை அணா 8.

9 அணா ஸ்டாம்பு அனுப்பினால் ஒரு புத்தகம் புக்போஸ்டில் அனுப்பப்படும்

கிடைக்குமிடம்:

பூங்கொடிப் பதிப்பகம்,
43, சென்த்தேரேஸ் வீதி, புதுச்சேரி.

### திருமணம்

கோவை: திருப்பூர் பிரபல கலர் வியாபாரியும், கௌரவ முதல் வகுப்பு நீதிபதியும் நமது இயக்க அன்பருமான தோழர் எஸ். எஸ். செட்டியாரின் புதல்வி தோழர் சிதாபாயிக்கும் அங்கேரிபாளையம் ரங்கசாமி செட்டியார் மகன் தோழர் ஆர். முத்துசாமிக்கும் 31-8-44 ஆந்தேதி ஆர். எஸ். புரம் தோழர் எஸ். ஆர். சுப்பிரமணியம் வீட்டில் ரிஜிஸ்தர் திருமணம் நடைபெற்றது. அதற்கு தோழர் ஜி டி. நாயுடு தலைமை வகித்து, தோழர்கள் திருப்பூர் கே. எஸ். ராமசாமிக் கவுண்டர் எம். எல். ஏ., ராஜ்பகதூர் சிக்கண்ண செட்டியார், எஸ். ஆர். சுப்பிரமணியம், கிருஷ்ணசாமி செட்டியார், ஜெ எஸ். கண்ணப்பர் முதலியோர் சீர்திருத்த ரிஜிஸ்தர் திருமணத்தைப் பாராட்டிப் பேசினர். நண்பர்கள், பந்துக்கள் அநேகர் திருமணத்திற்கு வந்திருந்தனர். தோழர் எஸ். எஸ். செட்டியாரால் "குடி அரசு"க்கும் "திராவிட நாட்டு"க்கும் ரூ. 5 முறையே நன்கொடை அளிக்கப்பட்டது.

### மதுரையிலே இளங்கோ திருநாள்

மதுரை: 27-8-44ம் தேதியன்று மாலை 7-மணிக்கு தமிழ்க்கலைக் கழகக் கட்டடத்தில் விருதை தோழர் ந. இராமசாமி (ஆசிரியர்: கலாநிலையப் பதிப்பகம்) தலைமையில் இளங்கோவடிகள் திருநாள் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. அவ்வமயம் தோழர்கள் பு. ரா. மதிவாணன், பு. செங்குட்டுவன் முதலியோர் பேசினர்.

### மாஸ்கோ

சென்னை சுயமரியாதைச் சங்கத் தோழர் எ. ஜெ. ஆதிமூலம் அவர்களின் குழந்தை மாஸ்கோ சில நாட்களாக நோய்வாய்ப்பட்டு 7-8-44 அன்று உயிர் நீத்தது.

### தூத்துக்குடி ஆதிதிராவிட மகாஜன சங்கம்

தூத்துக்குடி: டை சங்கம் ஒன்று திறக்கப்பட்டு 18-8-44ல் பதிவுசெய்யப்பட்டிருக்கிறது. இதன் அறிகுறியா 'குடி அரசு' வளர்ச்சிக்காக ரூபாய் ஒன்று நன்கொடை யளிக்கப்பட்டது. சங்க தலைவர் தோழர் லே. மாடசாமி; காரியதரிசி தோழர் வ. சு. நல்லகண்ணு.

* *

ஈரோடு: 18-8-44-ல் தோழர் வி. ஆறுமுகம் தலைமையில் நடைபெற்ற ஈரோடு மருத்துவர் சங்க மாதாந்திர கூட்டத்தில் தோழர்கள் அ. கருமலைசாமி, செ. வி. முத்து, எல். செல்லமுத்து முதலியவர்கள் சொற்பொழிவாற்றினார்கள்.

* *

திருவாரூர் முனிசிபல் சேர்மனும் இயக்க அன்பருமான தோழர் வி. ராமநுஜமுதலியார் இளையகுமாரத்திபத்மா அவர்களுக்கு 2-9-44ல் ஆண்குழந்தை பிறந்தது. தாயும் சேயும் சுகமாக இருக்கிறார்கள்.

(ஒரு நிருபர்)

* *

15-8-44-வில் நடைபெற்ற சிதம்பரம் திராவிடர் கழக நிர்வாகிகள் கூட்டத்தில், பொது இடங்களிலெந்த மதத்திற்குமுரிய சிலைகளோ சித்திரங்களோ இருக்க இடங் கொடுக்கக் கூடாதென்றும், பதிவுத்திருமணங்களை ஜில்லா ரிஜிஸ்தரார் தவிர சப்ரிஜிஸ்திரார்களும் பதிவுசெய்ய அனுமதிக்க வேண்டுமென்றும், ரயில்வே நிலைய விற்பனை அதிகாரிகள் தமிழரியக்க பத்திரிகைகளையும் சரிபாதி விற்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்வதாகவும், அண்ணாமலை பல்கலைக் கழகத்தில், திராவிடர் தலைவர்கள் படத்தை அமைக்க அனுமதிக்கும்படியும் தீர்மானிக்கப்பட்டது.

Edited Printed and Published by N. Karuppaswamy at the Tamilian Press, 48, [illegible] Street, Erode.